வார இதழ்
வெள்ளிதோறும்
தமிழக
# அரசியல்
புதியதோர் உலகம் செய்வோம்
Vol - 14 Iss. - 25 விலை ரூ.20 www.tamilagaarasiyal.com 03.02.2022









## நகர்ப்புற தேர்தல்...

# ‘திரிசூல’ வியூகம்!

# விட்டமின்... வில்லங்கம்..!



## இலங்கையில் தமிழக மீனவர்கள் படகுகள் ஏலம்...

# மத்திய அரசு தடுத்து நிறுத்த முதல்வர் - ஜி.கே.வாசன் கோரிக்கை!

'இலங்கையில் தமிழக மீனவர்களின் படகுகளை ஏலம் விடுவதை மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும்' என்று பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். இலங்கையின் இந்த அடாவடிக்கு தா.ம.க. தலைவரும், ராஜ்யசபா எம்.பி.யுமான ஜி.கே.வாசன் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

தமிழக மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் சம்பவங்களை தடுக்கவும், தமிழக மீனவர்களின் படகுகள் ஏலம் விடுவதை தடுக்கவும் கோரி முதல்வர் ஸ்டாலின் பிரதமர் மோடி மற்றும் மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் ஆகியோருக்கு கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில், "நாகப்பட்டினம் மாவட்டம், புஷ்பவனம் கிராமத்தை சேர்ந்த 3 தமிழக மீனவர்கள், கடந்த 23ம் தேதி அன்று வேதாரண்யம் கடற்கரையிலிருந்து 16 கடல் மைல் தொலைவில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கையைச் சேர்ந்த அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 300 கிலோ எடைகொண்ட மீன்பிடி வலை, தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் 30 லிட்டர் டீசல் ஆகியவை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. தாக்குதலுக்குள்ளான மீனவர்கள் வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்வாறு அப்பாவி மீனவர்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் நடத்துவதன் மூலம், தமிழக மீனவர்களை, அவர்களது பாரம்பரிய பாக் வளைகுடா மீன்பிடி கடல் பகுதிகளுக்கு வரவிடாமல் தடுப்பதை இலக்காகக் கொண்டு இலங்கை செயல்படுவதை காண முடிகிறது.

இது நமது மீனவ மக்களின் வாழ்வாதாரத்திற்கு கடுமையான அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளன. இந்த விவகாரத்தில் இந்திய அரசு வாய்மூடி மௌனமாக இருத்தல் கூடாது. அதேபோன்று இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 105 மீன்பிடிப் படகுகளை மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை வரும் பிப்.7 முதல் பிப்.11 வரை ஏலத்தில் விடுவதற்கு முயற்சி செய்து வருகிறது.

இந்தியாஇலங்கை கூட்டுப் பணிக்குழுவானது மீன்பிடித்தல் தொடர்பான பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கவிருக்கும் சூழ்நிலையில், இந்த ஏலம் விடுவதற்கான அறிவிப்பு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள இப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காண முன்வந்துள்ள தமிழக மீனவர்களுக்கு அதிர்ச்சியையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.



தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதும், அவர்களது உடைமைகளை கொள்ளையடிக்கும் அல்லது சேதப்படுத்தும் செயல்கள் எதிர்காலத்தில் நடைபெறாத வகையிலும் தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை அரசுக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும்" இவ்வாறு அந்த கடிதத்தில் முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டிருந்தார்.

முன்னதாக, தா.ம.க. தலைவர் ஜி.கே.வாசன் மத்திய அரசுக்கு விடுத்துள்ள கோரிக்கையில், "நாகப்பட்டின மீனவர்கள் வேதாரண்யம் அருகே கோடியக்கரைக்கு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்கொள்ளையர்கள் 3 மீனவர்கள் மீது இரும்பு கம்பி, அரிவாள், ரப்பர் கட்டை ஆகியவற்றால் தாக்கியதில் பலத்த காயமடைந்துள்ளனர்.

மேலும் மீனவர்களின் வலை, பேட்டரி, செல்போன், ஜி.பி.எஸ்., வாக்கி டாக்கி, டீசல் போன்றவற்றை அபகரித்துச் சென்றனர். காயம் அடைந்த மீனவர்கள் வேதாராண்யம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களுக்கு தமிழக அரசு உயர்தர மருத்துவ சிகிச்சை அளித்து விரைவில் குணம் அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீனவர்கள் எல்லைக்குட்பட்ட பகுதியில் மீன்பிடிக்கும்போதே இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தி அச்சுறுத்துவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். எனவே மத்திய அரசு, இலங்கை அரசிடம் உடனடியாக பேசி, தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்கொள்ளையர்களின் அராஜகத்துக்கு கண்டனம் தெரிவிப்பதோடு, இதுபோன்ற செயல் தொடரக்கூடாது என்பதையும் வலியுறுத்த வேண்டும்.

ஏற்கனவே தமிழக மீனவர்களிடம் இருந்து இலங்கை அரசு பறிமுதல் செய்த நாட்டுப்படகு, விசைப்படகு என 105 படகுகளை பிப்ரவரி 7 முதல் 5 நாட்களுக்கு ஏலம் விடப்போவதாக இலங்கை அரசு அறிவித்ததையும் மத்திய அரசு கண்டிக்க வேண்டும். ஒரு புறம் இந்திய அரசு தமிழக மீனவர்களை விடுவிக்க பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கும் வேளையில், குறிப்பாக இந்திய அரசு, இலங்கைக்கு தொடர்ந்து பல வழிகளில் உதவிகள் செய்து வரும் வேளையில் தமிழக மீனவர்கள் 56 பேரை விடுவிக்கவும், மீனவர்களின் அனைத்துப் படகுகளை உடனடியாக ஒப்படைக்கவும் இந்திய அரசு, இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று த.மா.கா சார்பில் கேட்டுக் கொள்கிறேன்" இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

எனவே, தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகிறார்கள். இதற்கு மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதே தமிழக அரசியல் தலைவர்களின் கோரிக்கையாக இருக்கிறது.

●பதிப்பாளர்/ஆசிரியர்



மு.க.ஸ்டாலின் – ஆர்.என்.ரவி

# வெடித்த 'பனிப்போர்'!



திடுக்கிடும் பாண்டியன்

'பனிப்போர் ஆரம்பித்துவிட்டது' என்று சொல்லிக்கொண்டே அலுவலகத்திற்கு வந்த அலெக்ஸிடம், 'பாஸ்... என்ன ராஜ்பவன் வழியாக வந்தீரோ..?' என்றோம். ' பனிப்போர்' என்று சொல்லும்போதே கெஸ் பண்ணிவிட்டோம்' என்றோம்.

''பரவாயில்லை... உங்களுக்கும் புரிந்துவிட்டாதா... 'அண்ணா அறிவாலயத்திற்கும் - ராஜ்பவனுக்கு இடையேயான பனிப்போர் உச்சக்கட்டத்தை எட்டியிருக்கிறது. இதனால் முதல்வர் ஸ்டாலின் சில நாட்கள் கடுங்கோபத்தல் இருந்தாராம். இந்த நிலையில்தான் வைகோவை வைத்து ராஜ்பவனுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார் முதல்வர் என்கிறார்கள்"

''பாஸ்... கொஞ்சம் புரியும் படியாகச் சொல்லுங்கள்...?"

"குடியரசு தின வாழ்த்துச் செய்தியில் நீட் தேர்வு மற்றும் மும்மொழிக் கொள்கை திணிப்புக்கு ஆதரவாக தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி கருத்து தெரிவித்தார். இதனை தி.மு.க. சற்றும் எதிர்பார்க்க வில்லை. இந்த நிலையில்தான் கவர்னரின் கருத்துக்கு வைகோ கண்டனம் தெரிவித்திருக்கிறார்"



வைகோ

"என்ன..?"

" வைகோ விடுத்துள்ள அறிக்கையில், 'நாட்டின் 73 ஆவது குடியரசு நாள் விழாவை ஒட்டி தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் விடுத்திருந்த வாழ்த்துச் செய்தியில் விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் விடுதலை வீரர்கள், தலைவர்களின் பங்களிப்பை நினைவு கூர்ந்து இருந்தார். இந்திய தேசிய இராணுவத்தை கட்டி எழுப்பி பிரிட்டீஷ் அரசுக்கு எதிராக ஆயுதம் தரித்துப் போர்க்களத்தில் வீரச்சமர் புரிந்த மாவீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தியாகத்தையும், அவரது படையில் அணிவகுத்த தமிழர்களின் வீரத்தையும் சுட்டிக்காட்டி உள்ளார்.

தமிழக அரசின் பணிகளை பாராட்டியுள்ள ஆளுநர், பல்வேறு துறைகளின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டில், பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகவும், எடுத்துக்காட்டாகவும் தமிழ்நாடு இருக்கிறது என்பதையும் தமது அறிக்கையில் ஆளுநர் சிறப்பித்து கூறி இருக்கின்றார். ஆனால், ஆளுநரின் அறிக்கையை முழுமையாக ஆழமாக உள்வாங்கினால்தான் தெரிகிறது, பூவினுள் வாசம் போல் பொதிந்திருக்கும் கருத்துக்கள், ஒன்றிய பாஜக அரசின் செயல்பாடுகளையும், அதற்கு பின்னணியில் இருந்து இயக்கி வரும் கோட்பாடுகளையும் உயர்த்திப் பிடிக்கும் வகையில் இருக்கின்றது என்பது"

''ஆளுநரின் உரையில் அரசியல் பின்னணியா..?"

''அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஆளுநர் என்பவர் அனைத்து மக்களுக்கும் பொதுவானவர்; எந்த தத்துவத்தின் சாயலும் ஆளுநர் மீது படர்ந்து விடலாகாது; ஆனால் தமிழ்நாட்டு ஆளுநரின் வாழ்த்துச் செய்தி அந்த எல்லைகளை கட்டறுத்து தாண்டி இருப்பதை ஏற்க முடியாது. உலகப் பொதுமறை 'திருக்குறளை' வேத சட்டகத்தினுள் அடைக்க முயற்சிப்பதையும் தமிழர்கள் வேடிக்கைப் பார்க்க மாட்டார்கள். மருத்துவப் படிப்புகளுக்கு 'நீட்' கட்டாயம் என்பதை எதிர்த்து தமிழ்நாடு சட்டமன்றத்தில் சட்டமுன்வரைவு நிறைவேற்றி, அதனை ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காக ஆளுநருக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. முதலமைச்சர் நேரில் சென்று வலியுறுத்தியும் கூட ஆளுநர் 'நீட்' விலக்கு சட்ட முன்வரைவுக்கு இசைவு அளித்து ஒன்றிய அரசின் பரிந்துரைக்கு அனுப்பவில்லை"

"ம்ம்ம்..!"

"இந்நிலையில் 'நீட்' தேர்வு அவசியம் என்று பொருள்படும்படி மேலோட்டமாக ஆளுநர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டி இருக்கிறார். பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய இருமொழிக் கொள்கை தீர்மானத்தை அரை நூற்றாண்டு காலமாக தமிழ்நாடு கடைபிடித்து வரும் நிலையில், தமிழக மாணவர்கள் இன்னொரு மொழியை கற்க வேண்டும் என்று, இந்தி மொழிக்கு மறைமுகமாக வக்காலத்து

வாங்குவதையும், மும்மொழிக் கொள்கைக்கு ஆதரவான அறிவுறுத்தலையும் ஆளுநர் வழங்கி இருப்பதை பொறுத்துக் கொள்ள முடியாது. அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் இயங்கும் ஆளுநர், மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட மாநில அரசின் உரிமைகள், கடமைகளுக்கு உரிய மதிப்பை அளித்து எல்லை மீறாமல் தமது பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்' என்று கூறியிருக்கிறார்"

"ஓ... தி.மு.க. சார்பாக வைகோ கண்டனத்தை தெரிவித்திருக்கிறாரோ..?"

சிரித்துகொண்டே, ''உ.பி.யில் புதிய ஃபார்முலாவை கையில் எடுத்திருக்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா"

"அப்படி என்ன ஃபார்முலா..?"

''கடந்த எம்பி தேர்தலில், பாஜக தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றதற்கு, உபியில் கிடைத்த அதிகமான தொகுதிகளே அடித்தளமிட்டன. 2017ல் நடந்த சட்டப்பேரவை தேர்தலிலும் நான்கில் 3 பங்கு பெரும்பான்மையுடன் ஆட்சியை பிடித்தது பாஜக. இப்போதும் மறுபடியும் ஆட்சியை பிடிக்க வேண்டுமென்றால், உபியை தன்னுடைய கோட்டையாக கையில் இறுக்கிப்பிடித்து வைத்து கொள்ள வேண்டும் என்பதை பாஜக மேலிடம் நன்றாக உணர்ந்துள்ளது. அதனால்தான், இந்த முறையும் பாஜக தலைவர்கள் உபியில் முகாமிட்டு வருகின்றனர். இதில் அமித்ஷா கூடுதலாக கவனம் செலுத்தி வருவது மேற்கு உத்தரபிரதேசத்தில்தான். மேற்கு உத்தர பிரதேச பொறுப்பையும் அமித்ஷா நேரடியாகவே ஏற்றுக் கொண்டுள்ளார். இதற்கு காரணம், மாநிலத்தின் பல பகுதிகளை போலவே, மேற்கு உபியிலும் அகிலேஷுக்கு ஆதரவுகள் பெருகி கிடப்பதுதான்"

"ஓ...ஹோ..?"

"பாஜகவில் இருந்து மூத்த தலைவர்கள் விலகி சமாஜ்வாதி கட்சியில் இணைந்தபோதே, அமித்ஷா உஷாராகவிட்டதாக கூறப்படுகிறது.. அதேசமயம், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரை முழுமையாக ஒன்றிணைப்பது என்பது இப்போதைக்கு சாத்தியமில்லாத ஒன்று என்பதையும் மேலிடம் நன்றாக அறிந்துள்ளது. எனினும், பிற்படுத்தப்பட்டோர் அரசியலுக்கு எதிரான தலித் வாக்கு வங்கியையும் ஈர்க்கும் முயற்சியில் சமீபகாலமாக இறங்கியுள்ளது. தலித் சமூக வாக்கு வங்கியை தங்கள் பக்கம் கொண்டு வரும் தங்களின் இந்த முயற்சி, நிச்சயம் வெற்றி பெறும் என்றும் அக்கட்சி நம்புகிறது. அதற்காக மேற்கு உபியைதான் பாஜக அதிக கவனம் செலுத்த தொடங்கி உள்ளது. இந்த மேற்கு பகுதி தான், பாஜகவின் கோட்டையாக கருதப்படுவது. இங்குள்ள 108 தொகுதிகளில் 83 தொகுதிகளை கடந்த 2017ம் ஆண்டு தேர்தலின்போது பாஜக கைப்பற்றியிருந்தது. ஆனால், அகிலேஷின் ஆதரவு இந்த பகுதியிலும் பெருகிவிடக்கூடாதே என்பதற்காகத்தான், அமித்ஷா மேற்கு உபியில் முற்றுகையிட்டுள்ளார்"

"ம்ம்ம்...?"

"நான்கு நாட்களுக்கு முன்புகூட, சாம்லி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து, பிரச்சாரம் செய்தார். அதிலும் வீடு வீடாக சென்று ஓட்டு கேட்டார். பாஜக நிர்வாகிகள் ஒருத்தரைவிடாமல் சந்தித்து பேசினார். மீரட் நகருக்கு சென்று, கல்வியாளர்கள், தொழில் அதிபர்கள், அந்த பகுதி விஐபிக்களை சந்தித்து பேசினார்.. கஜ்ராலா நகருக்கு சென்று பிரச்சாரம் செய்தார்.. இது எல்லாவற்றிற்கும் மேலாக, மேற்கு உத்தர பிரதேசத்தில் செல்வாக்கு மிக்க ஜாட் சமூகத்தின் தலைவர்களையும் அமித்ஷா சந்தித்து ஆதரவு கேட்டுள்ளார். மேற்கு உத்தரபிரதேசத்தில்




'தமிழக அரசியல்' இதழை தொடர்ந்து படித்துக்கொண்டிருக்கும் வாசகர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. 'புகார் பெட்டி' என்ற புதிய பகுதி தொடங்கி இருக்கிறோம். வாசகர்கள் தாங்கள் வசிக்கும் பகுதிகளில் நடக்கும் அட்டூழியங்கள், ஊழல்கள், பொதுமக்கள் பாதிப்படையக்கூடிய வகையில் எந்தவொரு நிகழ்வு நடந்தாலும், அதனை 'அலுவலக இ-மெயில் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது கடிதம் மூலமாகவும் அனுப்பலாம்.

உங்களது தகவல்களை சம்பந்தப்பட்ட பகுதி நிருபர்களுக்கு அனுப்பி, புலனாய்வு செய்து, செய்தியில் உண்மையிருந்தால் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்!







# அமித்ஷா வியூகம் பலிக்குமா..?

ஜாட் சமுதாயத்தினர் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகள்தான். கடந்த 2014, 2019 எம்பி தேர்தல்களாகட்டும், 2017ல் நடந்த சட்டப்பேரவை தேர்தலாகட்டும், ஜாட் சமுதாயத்தினர் தான் பாஜகவை கை தூக்கி விட்டனர். பக்கபலமாக இருந்து ஆதரவு தெரிவித்தனர். ஆனால், இந்த முறை வேளாண் சட்டங்களை மத்திய அரசு கொண்டுவந்துவிடவும், இதே ஜாட் சமுதாயத்தினர்தான் ஒரு வருடத்துக்கும் மேலாக போராட்டத்தில் குதித்தனர்.

பாஜக மீது வெறுப்பு காட்டினர். என்னதான் வேளாண் சட்டங்களை திரும்ப பெற்றாலும், இப்போதுகூட அந்த அதிருப்தி விவசாயிகளுக்கு விலகவேயில்லை. எனவேதான், இந்த கோபத்தை தணிக்க அமித்ஷா திட்டமிட்டார். சமீபத்தில் ஜாட் சமுதாய தலைவர்களை டெல்லியில் அழைத்து பேசியிருக்கிறார். சஞ்சீவ் பல்யாண், உபி அமைச்சர் பூபேந்திர சவுத்ரி, உள்ளிட்ட நிறைய ஜாட் சமூகத்தின் தலைவர்கள் இதில் கலந்து கொண்டுள்ளனர். இவர்களை அமித்ஷா ஓரளவு சமாதானப்படுத்தியதாக தெரிகிறது"


"பரவாயில்லையே..?"

"எனினும் இந்த சமுதாயத்தை சேர்ந்த முக்கிய தலைவர்கள், அகிலேஷின் சமாஜ்வாதி கூட்டணியிலும் உள்ளதால், எந்த அளவுக்கு பாஜகவுக்கு ஆதரவு கிடைக்கும் என்று தெரியவில்லை. ஆனால், ஜாட் சமூகத்தினரின் வாக்குகள் நிச்சயம் சிதறக்கூடும் என்றே தெரிகிறது"

"அமித்ஷாவின் வியூகம் பலிக்குமா..?"

"அமித்ஷாவின் வியூகம் பலிக்குமா என்பது தேர்தல் முடிவில்தான் தெரியவரும்" என்று சொல்லிவிட்டு அலுவலகத்தைவிட்டுக் கிளம்பினார் அலெக்ஸ்! ■

# தி.மு.க.வுக்கு தாவிய அ.தி.மு.க. சேர்மன்!



பச்சையாம்மாள் – சீனிவாசன்



துரை மமது



தட்சிணாமூர்த்தி

**“அடிமேல அடி அடிச்சா அம்மிக்கல்லே நகரும்போது அதிமுக சேர்மன் நகரமாட்டாரா? ம்... நகர்ந்துவிட்டார், அதிமுகவுல இருந்து திமுகவுக்கு!**

திருவண்ணாமலை மாவட்டம் மேற்கு ஆரணி யூனியன் சேர்மன் பச்சையம்மாள் சீனிவாசன் நான்கு பக்க நெருக்கடி தாங்க முடியாமல் திமுகவிற்கு தாவியவர் இவர்தான்! என்ன நடந்தது? பச்சையம்மாள் சீனிவாசனை ஓட்டு போட்டு சேர்மனாக்கிய அதிமுக கவுன்சிலர்களிடம் பேசினோம்.

‘‘சேர்மன் பதவியை பிடிக்க அதிமுகவிலும், திமுகவிலும் கடுமையான போட்டி. அதிமுக தரப்பில் ஒன்றிய செயலாளர் வக்கீல் சங்கர் நாற்பது லட்சத்துடன் தன் மனைவி மஞ்சுளாவை களமிறக்கினார். திமுக தரப்பில் இலக்கிய அணி விண்ணமங்கலம் ரவி மனைவி ஜெயராணியையும், ஒன்றிய செயலாளர் தட்சிணாமூர்த்தி மனைவி செல்வியையும் களமிறக்க, மூவரும் ஒருவரைஒருவர் காலி பண்ணிகிட்டாங்க. அதிமுக தரப்பில் ஏழு, திமுக தரப்பில் ஏழு, பாமக மூன்று, சுயேட்சை ஒன்று என்று பட்டியல் வாசித்தது தேர்தல் முடிவு வேறு வழியில்லாமல், தான் செலவு பண்ண பணத்துக்கு பச்சையம்மாள் சீனிவாசன் என்பவரை சேர்மன் ஆக்கினார் வக்கீல் சங்கர்.

அதோட நில்லாமல் சேர்மன் சீட்ல உட்கார்ந்து அதிகாரிகளை அதட்டல் போடுவதில் ஆரம்பித்து, சேர்மன் பயன்படுத்தும் டாடா சுமோவை தன்னுடைய பயன்பாட்டிற்கு வைத்துக் கொள்வது வரை எல்லைமீற ஆரம்பித்தார். அதிமுக, திமுக கவுன்சிலர்கள் கேள்வி கேட்டோம், அப்போதைய மந்திரி சேவூர் இராமச்சந்திரன் கிட்ட பஞ்சாயத்து வச்சார் சேர்மன் பச்சையம்மாள் சீனிவாசன். நான் செலவு பண்ண பணத்தை கெடுத்திட்டா ஒதுங்கிக்கிறேன் என்று வக்கீல் சங்கர் சொல்ல, தான் குடியிருந்த இ.பி.நகர் வீட்டை விற்று பணத்தை செட்டில் பண்ணிவிட்டார்.



வக்கீல் சேகர்



வேலாயுதம்



வெள்ளை கணேசா

அடுத்து பாமகவை சேர்ந்த துணை சேர்மன் வேலாயுதம் சேர்மனாக ஆக்ட் பண்ண ஆரம்பித்தார் பச்சையம்மாள் சீனுவாசனை டம்மியா வச்சிகிட்டு கவுன்சில் மீட்டிங் நடத்துவது அதிகாரிகளுக்கு உத்தரவு போடுவது என்று நாட்டாமை பண்ண ஆரம்பித்தார். பச்சையம்மாள் சீனிவாசனை அதிகாரிகள் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. இரண்டு வருஷமா சரிவர நிதி வரல, கொரோனா காலம், லட்சக்கணக்கில் செலவு பண்ணி ஜெயித்த கவுன்சிலர்கள் நெருக்கடி நான் பதவியை ராஜினாமா பண்ணப்போறேன்னு பச்சையம்மாள் சீனிவாசன் பத்திரிகையாளர்களை கூப்பிட, விஷயம் தெரிந்து மந்திரி சேவூர் இராமச்சந்திரன் சமாதானம் செய்து வைத்தார்.

இந்நிலையில் ஆட்சி மாறியது மெல்ல மெல்ல காட்சிகளும் மாற ஆரம்பித்தது. நடக்கறது திமுக ஆட்சி அதனால நாங்க சொல்றதைதான் நீங்க கேட்கனும் என்று அதிகாரிகளை திமுக கவுன்சிலர்கள் விரட்டவும் மிரட்டவும் ஆரம்பிக்க, மூன்றாவது முறையாக பச்சையம்மாள் சீனிவாசன் டம்மி சேர்மன் ஆக்கப்பட்டார். தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்ட சேர்மனிடம், நீங்க நிம்மதியா செயல்பட பத்து ரூபாய் சம்பாதிக்க ஒரு பரிகாரம் இருக்கு சொல்லவா? என்ற திமுக கவுன்சிலர் பகுத்தறிவு துரைமாமது, எங்க கட்சிக்கு வந்திடுங்க தொல்லை இல்லாம நிம்மதியா இருக்கலாம் என்று தூண்டில்போட, ஒன்றிய செயலாளர்கள் தட்சிணாமூர்த்தி, வெள்ளைகணேசன் மாவட்ட செயலாளர் தரணிவேந்தன் மூலம் சென்னைக்கு கூட்டிகிட்டு போய் மந்திரி எ.வ.வேலு வீட்ல திமுகவுல ஐக்கியம் பண்ணிட்டாங்க.

முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் பிரமாண்ட இணைப்பு விழா நடத்த அதிமுக கவுன்சிலர்கள் ஊராட்சி மன்ற தலைவிகளிடம் பேச்சி வார்த்தை போய்கிட்டு இருக்கு" என்றனர்.

தட்சிணாமூர்த்தி, வெள்ளைகணேசன் துரைமாமது உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் என்ன சொல்கிறார்கள்...? "பச்சையம்மாள் சீனிவாசனை திமுகவில் சேர்த்துவிட்டோம் முதல்வர் முன்னிலையில் இணைப்புவிழா பண்ணப்போறோம். மந்திரி எ.வ.வேலுகிட்ட தேதி வாங்கி தரச்சொல்லி இருக்கோம்'' என்கின்றனர்.

சேர்மன் பச்சையம்மாள் சீனிவாசன் தரப்பில், "இப்போதைக்கு நான் மட்டும்தான் சேர்ந்திருக்கேன் மற்ற விஷயத்தை அப்புறம் சொல்றேன்" என்கிறார்.

## -பலவீனமான ஆரணி அ.தி.மு.க.

இதனால ஒரு விஷயம் நடந்திடுச்சி ஆரணியில அதிமுக பலவீனமாயிடுச்சி திமுக பலமாயிடுச்சி என்கின்றனர் உடன்பிறப்புகள். நடக்கட்டும் நடக்கட்டும்.

● நமச்சிவாயம்



# முதல்வரின் முதல் விக்கெட்!

“ உள்ளாட்சி தேர்தல் தேதி அறிவிக்கப்படுவதற்கு முன்பே, தேர்தல் வாக்குறுதிகளை தி.மு.க. செயல்படுத்த வில்லை என எதிர்க்கட்சிகள் ஏளனம் பேசின! அதோடு பொங்கல் தொகுப்பில் ஏராளமான ஊழல்கள் நடந்தது என பி.ஜே.பி. தலைவர் அண்ணாமலை உள்பட எடப்பாடியாரும் கூறிவந்தார்.

தி.மு.க. அரசு மீது இப்படி குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசி வாக்குகளை பெற்றுவிடலாம் என எதிர்க்கட்சிகள் நம்பியிருந்தன. ஆனால், முதல்வர் எடுத்த அதிரடி நடவடிக்கையில் முதல் விக்கெட் விழுந்துள்ளது. அடுத்தடுத்து, பி.ஜே.பி., தரப்பிலும், அ.தி.மு.க. தரப்பிலும் விழும் என்கிறார்கள்.




இது பற்றி அறிவாலயம் தரப்பில் விசாரித்த போது, ‘‘பொங்கல் பண்டிகைக்கு 21 பொருள்கள் அடங்கிய பரிசுத்தொகுப்பு வழங்கப்படும் என திமுக அரசு அறிவித்திருந்தது.

ஆனால், அந்த பரிசுதொகுப்பு பொருட்கள் விநியோகிக்கப்பட்ட நாளிலிருந்தே ஏகப்பட்ட புகார்கள் வந்து கொண்டிருந்தது. அந்த விநியோகிக்கப்படும் பொருள்களின் தரம் சரியில்லை, புளியில் பல்லி இருக்கிறது என்ற பகீர் குற்றச்சாட்டுகள் வந்தன.



அண்ணாமலை

ஏற்கனவே பொங்கல் பணம் இல்லை என்ற ஆதங்கத்தில் மக்கள் அதிருப்தியில் இருந்தபோது, இந்த பொங்கல் பரிசுத் தொகுப்பு மீதான குற்றச்சாட்டுகள் மேலும் அதிருப்தியை பெருக்கி, விமர்சனங்களையும் உருவாக்கியது. மக்களே மறந்தாலும், இந்த விஷயத்தை எதிர்க்கட்சிகள் மறக்காமல் தினம் தினம் பிரச்சாரமாக்கி கொண்டிருந்தன. போதாக்குறைக்கு, பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கியதில் 500 கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளது என்று, எடப்பாடி பழனிசாமி தரப்பு ஒரே போடாக போட்டது, திமுகவை நிஜமாகவே கலங்கடித்துவிட்டது.

அதனால்தான், இந்த விஷயத்தில் முதல்வர் ஸ்டாலின் உடனடியாக அக்கறை காட்டினார். காரணம், அதிமுக மாஜிக்களின் ஊழல் விஷயங்களை, திமுக அரசு கையில் எடுத்து, அவர்கள் ஒவ்வொருரின் மீதும் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், திமுக அரசின் மீதே இப்படி ஒரு ஊழல் புகாரை எடப்பாடி முன்வைத்திருந்தது, அதிர்ச்சியை ஏற்படுத்தியது. முதல்வர் ஸ்டாலின் இந்த பொங்கல் பரிசுத்தொகுப்பு விவகாரம் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனையையும் கடந்த வாரம் நடத்தினார்.

**–ஆட்டம் காணும் ‘ஆப்போசிட்’ பார்டிகள்!**

ஒருவேளை இந்த பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கியதில் தவறுகள் நடந்திருந்தால், விசாரணைக்குழு அமைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கையை முதல்வர் என்ற நம்பிக்கை எழுந்தது. அதன்படியே, பரிசு தொகுப்பில் தரமற்ற பொருட்கள் வழங்கிய நிறுவனங்கள் கறுப்பு பட்டியலில் வைக்க முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தினார். தவறு செய்வோர் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார். அரசின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த முயற்சிப்பதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க இயலாது என்று கண்டிப்புடன் முதலமைச்சர் கூறியிருந்தார்.

பொங்கல் பரிசு

## பத்து வருட 'சம்பாத்தியத்திற்கு' முற்றுப்புற்றி வைத்த அமைச்சர்!




கடந்த பத்து வருடங்களாக அரசு போக்குவரத்து கழக பேருந்துகள், சில ஓட்டல்களில் மட்டும் நின்று, ஓட்டுநர், நடத்துநர்கள் இலவசமாக உண்டு வந்தனர். அவர்களுக்கு சிகரெட்டு, ஆளுக்கு 100 ரூபாய் பணமும் கொடுக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், வழித்தட ஓட்டல்களில் உணவுபொருட்களில் தரம் சரியில்லை என்று புகார்கள் எழுந்து வந்தன. இந்த தகவல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பனின் காதுக்கு எட்டவே, முக்கியமான கோலோச்சி வந்த சில ஓட்டல்களில் அரசு பேருந்துகள் நிற்கக் கூடாது என அதிரடி உத்தவை பிறப்பித்தார். பத்து வருட பயணிகளின் கோரிக்கையை ஒரே நாளில் நிறைவேற்றி போக்குவரத்துத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பனின் முயற்சிக்கு, முதல்வர் உள்பட பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்!'



*பொருட்கள் வழங்குவதில் சில இடங்களில் பொருட்களின் தரம் குறித்த புகார்கள் வந்ததை தொடர்ந்து விரிவான விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இப்போது விஷயம் என்னவென்றால், சில இடங்களில் கொள்முதல் செய்த பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதில் மெத்தனமாக செயல்பட்டதாக தமிழ்நாடு குடிமைப்பொருள் வழங்கல் முதுநிலை தரக்கட்டுப்பாட்டு மேலாளரை பணி இடைநீக்கம் செய்து தமிழ்நாடு அரசு அதிரடியாக உத்தரவிட்டுள்ளது. அன்று முதல்வர் போட்ட போடு, இன்று ஒருவர் சிக்கி உள்ளார்.*

எடப்பாடி பழனிசாமி



*அதுமட்டுமல்ல, இனிவரும் காலங்களில் நியாயவிலை கடைகளில் வழங்கப்படும் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பொங்கல் பரிசு பொருட்கள் வழங்கியதில் சில இடங்களில் ஏற்பட்ட குளறுபடிகளை மிக விரிவாக விசாரணை செய்து முதல்வர் ஸ்டாலினிடம் விளக்கமளிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*எனவே கூடியசீக்கிரம் மெத்தனமாக செயல்பட்ட மேலும் சில அதிகாரிகள் மீது நடவடிக்கை பாயலாம் என்று தெரிகிறது. இதனால் கோட்டை வட்டாரமே கிடுகிடுவென நடுங்க ஆரம்பித்துள்ளது. ஒரு சின்ன குற்றச்சாட்டை முன்வைத்தாலும், அது தொடர்பாக உடனே விசாரிக்கப்பட்டு உடனே ஆக்ஷனும் எடுத்து விடுவது முதல்வர் ஸ்டாலினுக்கு கூடுதல் நன்மதிப்பை பெற்று தந்து வருகிறது" என்றனர்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் முதல் விக்கெட்டே எதிர்க்கட்சிகளை ஆட்டம் காண வைத்திருக்கிறது என்றே சொல்லலாம்!*

● க.சண்முகவடிவேல்



# இணையவழி நெல் கொள்முதல்...

## பரிதவிக்கும் விவசாயிகள்..!

**இணையவழியில் முன்பதிவு செய்தும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் முறையாக செயல்படாததால் டெல்டா மாவட்டங்களில் விவசாயிகள் நெல் மூட்டைகளுடன் இரவும் பகலாகவும் காத்திருக்கும் அவல நிலை தமிழகத்தில் காணப்படுகின்றது.**

இது குறித்து காவிரி டெல்டா பாசன விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் இளங்கீரன் தெரிவிக்கையில், ‘‘காவிரி டெல்டா பகுதிகளில் விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்வதில் பல்வேறு குளறுபடிகள் உள்ளதால் தமிழக முதல்வர் தலையிட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில்கொண்டு உடனடியாக ஆன்லைன் பதிவு கட்டாயம் என்ற உத்தரவை ரத்து செய்து பழைய நடைமுறையே செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். 2022ம் ஆண்டிற்கான நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்ட நிலையில் காவிரி டெல்டா பகுதிகளில் விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்வதில் பல்வேறு குளறுபடிகள் காரணத்தால், வெளிச்சந்தையில் விவசாயிகள் 63 கிலோ சன்ன ரகத்திற்கு ரூ.1050க்கு விற்பனை செய்து வருகிறார்கள்.



இளங்கீரன்

அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் 40 கிலோ சன்ன ரகத்திற்கு ரூ.836 அரசு அறிவித்தாலும், கிராம நிர்வாக அலுவலரிடம் அடங்கல் பெற்று ஆன்லைன் பதிவு செய்து பிறகு மீண்டும் கிராம நிர்வாக அலுவலரின் அனுமதி பெற்று நெல் கொள்முதல் நிலையத்தில் அனுமதி கடிதம் கிடைக்கப் பெற்றால் தான் நெல்லை விற்பனை செய்யும் நிலை உள்ளது.

பொதுவாக கிராமப்பகுதிகளில் இணையவழி சேவையில் பெரும் குளறுபடிகள் ஏற்படுவதால் இணையவழி முன்பதிவு என்பது விவசாயிகளுக்கு பெரும் சிரமத்தை தருகின்றது. அப்படியே பதிவு செய்தாலும், கிராம நிர்வாக அலுவலரின் ஒப்புகை பெற்று மீண்டும் இணையத்தில் பதிவேற்றம் செய்து அதை கிராம நிர்வாக அலுவலர் தமது அலுவலக இணையப்பதிவில் பார்த்து முன்பதிவு செய்வதற்குள் இணையசேவை பல்வேறு பகுதிகளிலும் துண்டிக்கப்படுகின்றது. பதிவு செய்யப்பட்ட விவசாயிகளின் அலைபேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி மூலம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் பெயர், நெல் விற்பனை செய்யப்படும் நாள் மற்றும் நேரம் தெரிவித்து அனுப்பப்படும் குறுஞ் செய்தியும் முறையாக, சரியான நேரத்திற்கு விவசாயிகளிடம் சென்றடைவதில்லை. இதனால் விவசாயிகளும், ஏன் அரசு அலுவலர்களுமே பெரும் சிக்கலை சந்தித்து வருகின்றனர்.

இதனால் வெளிச்சந்தை வியாபாரிகளுக்கும், இடைத் தரகர்களுக்கும் அடிமாட்டு ரேட்டுக்கு நெல்லை விற்பனை செய்யும் அவல நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுகின்றனர். இதில் விவசாயிகள் மட்டுமல்லாமல் கோயில் நிலங்களிலும், பெரும் செல்வந்தர்களிடமும் குத்தகை சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளும் பெரும் பாதிப்பை சந்தித்து வருகிறார்கள். இந்த நிலை காவிரி டெல்டா பகுதி முழுவதும் நீடிக்கிறது. எனவே எந்த நிபந்தனையுமின்றி கடந்த ஆண்டுபோல அடங்களை மட்டும் பெற்று, நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விவசாயிகள் நேரடியாக நெல்லை விற்பனை செய்வதற்கு அனுமதிக்க வேண்டும். இதை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும்.

இல்லையென்றால் விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைவதோடு, விலை வீழ்ச்சிக்கும் இது வழிவகுக்கும். எனவே, தமிழக முதல்வர் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்'' என்றார். ■

● பி.ரெங்கநாதன்

# ‘அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த தவறுகள் சரி செய்யப்படும்!’

**அ.தி.மு.க.வில்தான் அடிமட்டத்தில் இருப்பவரும் உச்சத்திற்கு செல்வார்கள் என்று அக்கட்சியினர் பேசிக்கொள்வார்கள். ஆனால், தி.மு.க.விலும் அடிமட்டத்தில் உள்ள ஒருவர் உச்சத்திற்கு செல்வார் என்பதை சொல்லாமல் செய்துகாட்டியிருக்கிறார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்!**

திமுக ஆட்சியமைத்த உடனே வாரியத் தலைவர் பதவிகள் நிரப்பப்படும் என அக்கட்சியைச் சேர்ந்த முக்கிய புள்ளிகள் எதிர்பார்த்து வந்தனர். கொரோனா இரண்டாவது அலை போராட்டம், நிதிப் பற்றாக்குறை என வாரிய நியமனங்கள் தொடர்ந்து தாமதமாகிக் கொண்டே வந்தன.

இந்நிலையில் கடந்த ஆகஸ்டு மாதம் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பீட்டர் அல்போன்ஸ் சிறுபான்மை ஆணையத் தலைவராக நியமிக்கப்பட்டார். லட்சக்கணக்கான தொழிலாளர்களைக் கொண்ட தமிழக கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் தலைவராக திமுகவின் தோழமை அமைப்புத் தலைவர் பொன்.குமார் நியமிக்கப்பட்டார். இந்த சூழலில் தற்போது வீட்டு வசதி வாரியத் தலைவராக பூச்சி. எஸ்.முருகன் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை கோயம்பேட்டில் உள்ள சிஎம்டிஏ அலுவலகத்தில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் வீட்டு வசதி வாரிய அமைச்சர் முத்துசாமி முன்னிலையில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

திமுக தலைமை நிலையச் செயலராக பதவி வகித்து வரும் பூச்சி. எஸ்.முருகனை வீட்டு வசதி வாரிய தலைவராக நியமித்து கடந்த இரு தினங்களுக்கு முன்பு தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு கோயம்பேடு சிஎம்டிஏ அலுவலகத்தில் பூச்சி எஸ்.முருகன் வீட்டு வசதி வாரிய தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டார். அதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த பூச்சி எஸ் முருகன், “வணக்கம். வீட்டு வசதி வாரிய தலைவராக நியமித்ததற்கு முதல்வருக்கும் வீட்டு வசதி வாரிய அமைச்சர் முத்துசாமிக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறேன். கடந்த ஆறு மாதங்களாக கடந்த ஆட்சியில் நடந்த தவறுகளை சரி செய்யும் பணியை அமைச்சர் மற்றும் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். அவர்களுடன் துணை நின்று என் பணிகளை மேற்கொள்ளுவேன்” என்று கூறினார்.



பூச்சி முருகன்

இந்த நிலையில்தான் பூச்சி முருகனின்



பூச்சி முருகன் இல்ல திருமண விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின்....

இல்லத் திருமணவிழாவில் கலந்துகொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசும்போது, “இந்தத் திருமணம் ஒரு கட்டுப்பாட்டோடு நடந்துகொண்டிருக்கிறது. கொரோனா தொற்று நோய் நாடு முழுதும் பரவிக்கொண்டிருக்கும் நிலையில், முழு ஊரடங்கு கட்டுப்பாடுகளை பின்பற்றி நடந்துகொண்டிருக்கிறது. இதுவே கொரோனா காலமாக இல்லாதிருந்தால் அறிவாலயத்தில் இடமே இல்லை என்ற அளவுக்கு கூட்டம் திரண்டிருக்கும்.

பூச்சி முருகனின் தந்தையார் மறைந்த சிவசூரியன் அவர்கள் தலைவர் கலைஞரிடத்திலே நெருக்கமாக இருந்தார். அவரது திருமணத்தை அண்ணா தலைமை தாங்கி நடத்தி வைக்க கலைஞர் முன்னிலை வகித்தார். சிவசூரியன் திரைப்படத்தில் மட்டுமல்ல கழகத்தின் பல நாடகங்களில் நடித்துள்ளார். 'நானே அறிவாளி' என்ற நாடகம், தலைவர் கலைஞர் ஆட்சிக்கு வருவதற்கு முன் அவரே அந்நாடகத்தில் நடித்தார். அவர் ஆட்சிக்கு வந்த பின் அந்த நாடகத்தில் முக்கிய பாத்திரத்தில் சிவசூரியன் நடித்தார்.

தமிழகம் முழுதும் நாடகம் நடத்தப்பட்டது. அந்த நாடகத்தில் அண்ணாவின் நண்பர் சி.வி. ராஜகோபால் நாரதர் வேடத்தில் நடித்தார். அவருக்கு உடல் நலம் சரியில்லாமல் நடிக்க இயலாமல் போன நிலையில் நாரதர் வேடத்தில் நான் தான் நடித்தேன். பூச்சிமுருகனின் தந்தையாரோடு நான் இணைந்து நடித்திருக்கிறேன்”என்று பழைய நிகழ்வுகளை நினைவு கூர்ந்தார் ஸ்டாலின்.

மேலும் பேசும்போது, “எல்லாரும் அவரை பூச்சி முருகன் என்று அழைப்பார்கள். சிலர் பூச்சி என்று அழைப்பார்கள். விஷப் பூச்சிகளை, நச்சுப் பூச்சிகளை, அக்கிரமமான பூச்சிகளை ஒழிக்க பணியாற்றிவருகிறார் பூச்சி முருகன். நான் எப்போதும் அவரை முருகன் என்றுதான் அழைப்பேன். ஏனென்றால் முருகன் மீது நமக்கு அன்பு உண்டு, பாசம் உண்டு” என்று சொன்னார். அந்த நேரத்தில் தமிழகம் முழுவதும் பல முருகன் கோவில்களில் குட முழுக்கு நடைபெற்றதை நினைவு படுத்தினார் மு.க ஸ்டாலின்.

தி.மு.க.வில் தொடர்ந்து அயராமல் பணியாற்றி பூச்சி முருகனுக்கு வீட்டு வசதி வாரியத் தலைவர் பதவி வழங்கி அழகு பார்த்திருக்கிறார் முதல்வர்.

தி.மு.க.விற்கு உண்மையாகவும், விசுவாசமாக உழைத்தால் பதவி தேடி வரும் என்பதையும் உணர்த்தியிருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## –வீட்டுவசதி வாரியத்தலைவர் பூச்சிமுருகன் உறுதி

● த.இக்னேஷியஸ்

# ஒன்றரை பவுன் நகைக்காக சிறுவன் படுகொலை!



குமரி மாவட்டம் கடியபட்டணத்தைச் சேர்ந்த பாத்திமா தெருவில் வசிக்கும் ஜாண் ரிச்சர்டு. அவரது மனைவி சகாயசிந்து. நான்கு வயது மகன் ஜோகன்ரிஷி. 2 மாத பெண் குழந்தை. ஜாண் ரிச்சர்டு தற்போது சவுதி அரேபியாவில் உள்ள தனியார் நிறுவனத்தில் மீன்பிடி தொழிலாளியாக பணியாற்றி வருகிறார். இவரது மனைவி, 2 குழந்தைகள் சொந்த ஊரில் வசித்து வந்தனர்.

*சிறுவன் ஜோகன்ரிஷி எப்போதும் போல் கடந்த 20ம் தேதி தெருவில் குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருந்தான். சிறுவனின் கழுத்தில் ஒரு பவுன் மதிப்புள்ள தங்க செயினும், கையில் அரைப்பவுன் மதிப்புள்ள பிரேஸ்லெட்டுடன் எப்போதும் போல் அணிந்திருந்தான். இந்த நகைகளை சிறுவனுக்கு காலனாகும் என்பதை யாரும் எதிர்ப்பார்க்கவில்லை.*

*சகாயசிந்துஜா மதிய நேரம் வீட்டில் வாசலில் நின்று எப்போதும் போல் மகனை அழைத்தால், கன்றுக்குட்டி தாயின் குரலைக் கேட்டு ஓடி வருவது போல் எப்போதும் ஓடி வரும் ஜோகன்ரிஷியை பலமுறை அழைத்தும் மகன் வராததால் மகன் விளையாடும் பகுதிக்குச் சென்று உடன் விளையாடிய சக குழந்தைகளிடம் மகன் எங்கே? என தேடிய போது அவர்கள் பார்க்கவில்லை என தெரிவித்தது பதட்டமடைந்த சகாயசிந்துஜா அந்த பகுதியில் இருந்த பல இடங்களிலும் அங்கிருந்த வீடுகளிலும் விசாரித்தபோது ஜோகன்ரிஷி பற்றிய எந்த தகவலும் கிடைக்கவில்லை.*

*கடியபட்டணம் ஊர் முழுவதும் சிறுவன் ஜோகன்ரிஷியைக் காணவில்லை என்ற செய்தி காட்டுத்தீ போல் பரவியது. சகாயசிந்துஜா மற்றும் ஊர் பெரியவர்கள் மணவாளக் குறிச்சி காவல்நிலையத்தில் அன்று காலை*

சிறுவர்களோடு விளையாடிக் கொண்டிருந்த 4 வயது சிறுவன் ஜோகன்ரிஷியைக் காணவில்லை. கழுத்து மற்றும் கையில் தங்கத்தால் ஆன அணிகலன்கள் ஒன்றரைப் பவுன் மதிப்பில் நகை அணிந்திருந்ததையும், உடுத்தியிருந்த ஆடையின் வண்ணங்களையும் தெரிவித்து புகார் கொடுத்தனர்.



பாத்திமா

சிறுவன் காணாது போன அடுத்த நாள் (21.01.2022) கடியப்பட்டண மீனவ கிராமத்தைச் சேர்ந்த அனைத்து ஆண் பெண் ஒன்றுகூடி காணாமல் போன சிறுவனை எவராது கடத்தி உள்ளார்களா? காவல்துறை விரைந்து கண்டுபிடித்து தரவேண்டுமென சாலை மறியலில் ஈடுபட்டனர். காவல்துறை தெரிவித்த எந்த சமாதானத்திற்கும் அந்த மக்கள் உடன்படாது தொடர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டனர்.

பாத்திமா தெருவைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது கடியப்பட்டணத்தைச் சேர்;ந்த இளைஞர்களும் தனியாக நடத்திய தேடலில் சிறுவன் ஜோகன்ரிஷியின் வீட்டின் அடுத்த வீட்டில் வசிக்கும் பாத்திமா என்ற பெண்ணின் நடவடிக்கையில் சந்தேகம் வரவே சம்பந்தப்பட்ட பெண்ணிடம் எதுவும் விசாரிக்காது பாத்திமா வீட்டினுள் புகுந்து சோதனையிட்டபோது ஒரு அறையில் இருந்த பீரோ பூட்டப்பட்டு சாவி எடுக்கப்பட்டிருந்தது. அந்த வீடு முழுமையும் தேடிய போது எந்த தடயமும் கிடைக்காத நிலையில் சந்தேகத்தில் பீரோவை உடைத்து பார்த்த போது பீரோவினுள் கை கால்கள் கட்டப்பட்டு சிறுவனின் உடல் இருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த இளைஞர்கள் சிறுவனின் உடலை எடுத்துக் கொண்டு அருகிலிருந்த மருத்துவமனைக்கு எடுத்துக்கொண்டு ஓடினார்கள்.

தன் மகன் கிடைத்துவிட்டான் என்ற தகவல் அறிந்த தாய் சகாயசிந்துஜா மகனின் உடலைக் காண ஓடிச் சென்றவர் அசைவற்று கிடந்த மகனின் உடலைக் கண்டு வெளிப்படுத்திய கதறல் ஓசை மணவாளக்குறிச்சி கடலின் ஓசையைக்கூட பின்னுக்குத் தள்ளிவிட்டது. கூடியிருந்த அத்தனை பேரும் அதிர்ச்சியில் சிலையாக நின்றனர்.



மருத்துவமனையில் பரிசோதித்த மருத்துவர் சிறுவனின் உடலில் கழுத்து மற்றும் தலைப்பகுதியில் காயங்கள் இருப்பதையும் சிறுவனை யாராவது கொலை செய்திருக்கலாம் என தெரிவித்த நிலையில் காவல்துறையினர் விரைந்து வந்து நான்கு வயது சிறுவனின் பூத உடலை மீட்டு உடற்கூறு சோதனைக்காக நாகர்கோவில் ஆசாரிபள்ளம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

## –கண்ணீரில் மிதக்கும் குமரி

சிறுவன் காணாது போன 2 நாட்களும்




குளச்சல் காவல்துறை துணை கண்காணிப்பாளர் தங்கராமன் மற்றும் பயிற்சி துணைக் கண்காணிப்பாளர் சிந்து, காவல்நிலைய ஆய்வாளர் அருள்பிரகாஷ் இரவு பகல் என முழுவீச்சில் காணாது போன சிறுவனை தேடிய நிலையில் சிறுவனின் வீட்டின் அடுத்த வீட்டு பீரோவுக்குள் நான்கு வயது சிறுவனை கொலை செய்து ப10ட்டி வைத்த கொடூரம் அதன் வேதனை குமரி மாவட்டத்தையே கண்ணீறில் விட வைத்துவிட்ட சோகம்.

ஊர் இளைஞர்கள் புகாரின் அடிப்படையில் காவல்துறை பாத்திமா அவரது கணவர் சரோபினை தனியிடத்தில் வைத்து நடத்திய விசாரணையில், "குளச்சல் பகுதியைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் ரூபாய் அறுபதாயிரம் கடன் வாங்கியதாகவும் அந்த கடனை அடைக்க முடியாமல் சிரமப்பட்டதையும் கடன் கொடுத்த பெண் தொடர்ந்து பணம் கேட்டு இவரை வீடு தேடி வந்த நிலையில் பணத்தை திருப்பிக் கொடுப்பதற்கு வழி தேடிக்கொண்டிருந்த நிலையில் தெருவில் விளையாடிய சிறுவனின் கழுத்து மற்றும் கையில் இருந்த ஆபரணங்களை எடுத்து கடனை அடைக்க நினைத்தேன்.

சிறுவன் விளையாடிக் கொண்டிருந்த இடத்திற்குச் சென்று அவனிடம் பேச்சுக் கொடுத்து என் வீட்டிற்கு அழைத்து வந்தேன். பக்கத்து வீட்டு சிறுவன் என்ற நிலையில் அவனும் என் வீட்டிற்குள் வந்தான். வீட்டின் தலைவாயிலை அடைத்துவிட்டு சிறுவனின் நகைகளை கழற்றியபோது அவன் ஓசையிட்டு அழத் தொடங்கினான். சிறுவனின் அழுகை ஓசை பக்கத்து வீட்டிலிருக்கும் அவன் தாய்க்கு கேட்டுவிடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வில் சிறுவனின் வாயைத் துணியால் அமுக்கி அடைத்தேன். சிறுவனின் கை கால்களை கயிற்றால் கட்டிய நிலையில் அவன் உடல் வளைந்து நெலிந்து கொண்டிருந்த நிலையில் கயிற்றால் கழுத்தை நெருக்கியபோது சிறிது நேரத்தில் அசைவற்றுக் கிடந்ததைக் கண்டு சிறுவனின் முகத்தில் தலையணை வைத்து அதன் மேல் நான் அமர்ந்து கடுமையாக அழுத்தம் கொடுத்த நிலையில் சிறுவன் பேச்சு மூச்சற்றுக் கிடந்தான். அவனது உடலை பீரோவில் வைத்து பூட்டிவிட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு குளச்சலுக்குச் சென்று வங்கியில் சிறுவனிடமிருந்து எடுத்த நகையை வங்கியில் ரூ.40 ஆயிரத்திற்கு அடமானம் வைத்து அந்த பணத்தை கடன் வாங்கிய பெண்ணிடம் கொடுத்துவிட்டு ஒன்றும் நடவாதது போல் ஊரில் நடமாடினேன்.

இரவில் ஊர் அடங்கியதும் கணவனோடு சேர்ந்து சிறுவனின் உடலை கடலில் வீசிவிட எண்ணினேன். இரவும் பகலும் மக்கள் நடமாடிக் கொண்டிருந்ததாலும் கடற்கரைப் பகுதிகளில் போலீஸ் கண்காணிப்பு இருந்ததாலும் நினைத்தது போல் கடலில் கொண்டு வீசமுடியவில்லை'' என பாத்திமா தெரிவித்த நிலையில் காவல்துறை பாத்திமாவையும் அவரது கணவன் சரோபினையும் கைது செய்து பாத்திமா தக்கலை பெண்கள் சிறையிலும் சரோபின் நாகர்கோவில் துணைச்சிறைச்சாலையிலும் அடைக்கப்பட்டனர்.

சவுதிஅரேபியாவில் இருந்து ஊர் திரும்பிய சிறுவனின் தந்தை ஜாண்ரிச்சர்டு பக்கத்து வீட்டுப்பெண்ணின் பணத்தாசையால் தன் மகன் அணிந்திருந்த நகைக்கு ஆசைப்பட்டு என் மகனை கொன்றுவிட்டாளே என எழுப்பிய அந்த ஒலி ஊர் மக்கள் அனைவரையும் துக்கத்தில் ஆழ்த்தியது.

சிறுவனின் உடல் உடல்கூறு சோதனைக்குப்பின் மருத்துவமனையிலிருந்து காவல்துறையினரால் மீட்டெடுக்கப்பட்டு பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சிறுவனின் உடலை நல்லடக்கத்திற்கு அந்த ஊரே ஒன்றுகூடி கண்ணீர் அஞ்சலி செலுத்தியது பார்ப்போர் மனதையெல்லாம் பதை பதைக்க வைத்தது. ■

த.இக்னேஷியஸ்












# குமரியில் பா.ஜ.க. – தி.மு.க. சுவரொட்டி யுத்தம்!

“ பொங்கல் விழாவிற்கு தமிழக அரசு வெளியிட்ட அறிக்கை குடும்ப அட்டைதாரர்களுக்கு 24க்கு பொருட்கள் கொண்ட தொகுப்பு இலவசமாக வழங்கப்படும் என்பதே முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கை. அதே நேரம் தமிழக மக்களின் மனதில் ஒரு எதிர்ப்பார்ப்பு இருந்தது உண்மையே. பொங்கலுக்கு பணப்பரிசு கிடைக்குமா?

தமிழக முதல்வர் ஸ்டாலின் பொங்கலுக்கு பணப்பரிசு பற்றிய எவ்வித அறிவிப்பையும் வெளியிடாத நிலையில் குமரியில் பா.ஜ.க வினர் அவர்கள் கற்பனையில் ஒரு காட்சியை கனவில் கண்டார்களோ என்னவோ?

முதல்வர் ஸ்டாலின் பொங்கலுக்கு அறிவித்த பரிசு ரூபாய் 5000 எங்கே? என்ற கேள்வியுடன் ஒரு சுவரொட்டியை கன்னியாகுமரி முதல் களியக்காவிளை வரை பிரதான சாலை பகுதிகள் மட்டுமல்லாது சிற்றூர்இ பேரூர்இ கிராமங்கள் என ஒவ்வொரு பகுதிகளிலும் கண்ணில் படும் சுவர்களில் எல்லாம் ரூபாய் 5000 எங்கே? என்ற சுவரொட்டிகளை காணமுடிகிறது. அதிலும் குறிப்பாக தி.மு.க சார்பில் பொங்கல் வாழ்த்து தெரிவித்து ஒட்டப்பட்ட சுவரொட்டிகளின் மேல் பா.ஜ.க வினர் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளது பொதுநிலையினர் மத்தியில் அரசியல் நாகரீகமற்ற செயலாக பார்த்தனர்.



மோடி



மு.க.ஸ்டாலின்

கல்வியில் சிறந்த மாவட்டம் தமிழகத்திலே அதிக எழுத்தறிவு பெற்ற மக்களை கொண்ட மாவட்டம் என்ற தனித்த பெருமை பெற்ற மாவட்டத்தின் புகழுக்கு சிறுமையை ஏற்படுத்தும் நிலையில் சாதாரணமாகவே சொல்லப்படும் ஒரு சொல்லாடல் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை இந்தியா ஒன்றே என்ற சொல் வழக்கத்தில் உள்ளது. இந்தியாவின் தென் எல்லை கன்னியாகுமரி என்ற பெயர்ச்சொல்லை இவர்கள் ஒட்டிய சுவரொட்டிகளில் பா.ஜ.க கன்யாகுமரி என பிழையுடன் அச்சடித்துள்ளதை பார்த்த மக்கள் வெளிப்படுத்தியது ஒரு ஏளன புன்னகை. அதில் அவமானப்பட்டது குமரியின் தனித்த கல்விப் பெருமை.



மன்மோகன் சிங்

சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டி என்ற பழமொழியை மெய்ப்பித்துவிட்டது பா.ஜ.கவின் சுவரொட்டி என தி.மு.கவினர் பொதுவெளியில் தொடர்ச்சியாக எழுப்பும் கேள்வி.


மோடி மக்களவை தேர்தல் காலத்தில் மேடைதோறும் அறிவித்தது பா.ஜ.க ஆட்சி அமைந்தால் இந்திய மக்களின் ஒவ்வொருவர் வங்கி கணக்கிலும் ரூபாய் 15 லட்சம் வரவு வைக்கப்படும் என்ற மோடியின் அறிவிப்பு கடந்த 7 ஆண்டு ஆட்சியில் எத்தனை பேரின் வங்கி கணக்கில் ரூபாய் 15 லட்சம் போடப்பட்டுள்ளது? பதில் சொல்லுங்கள் என்ற தி.மு.க சுவரொட்டிகள் எழுப்பியுள்ள பல வரிசைக் கேள்விகள்

நாகர்கோவில் பெரும் நகர தி.மு.க செயலாளர் வழக்கறிஞர் மகேஷிடம் பா.ஜ.கவின் சுவரொட்டிகள் பற்றி கேட்டபோது, "ஓசையுடன் ஒரு புன்னகையை வெளிப்படுத்தியவாறே தலைவர்ஐஐ தமிழக முதல்வர் தமிழக மக்களுக்கு 24க்கு பொருட்கள் அடங்கிய பொங்கல் தொகுப்பு ஒன்றை இலவசமாக கொடுக்கப்படும் என அறிவித்தாறே அன்றி ரூபாய். 5000 பொங்கலுக்கு இனாம் என அறிவிக்கவே இல்லை.

அ.தி.மு.க ஆட்சியின்போது கொரோனா உச்சத்தில் இருந்த வேளையில் தமிழக மக்கள் வருவாய் இன்றி கஷ்டப்பட்ட காலத்தில் அவர்களின் வறுமையை போக்கும் வழியில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தமிழக அரசு ரூபாய் 5000 இலவச நிதி உதவி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை அன்றைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியை நோக்கி கோரிக்கை வைத்தார். ஆனால் அன்றைய முதல்வர் குடும்பம் ஒன்றிற்கு ரூபாய் 1000ஃ மட்டுமே கொடுத்த நிலையில் தலைவர் தேர்தல் காலத்தில் சென்னை முதல்

குமரி வரை பங்கேற்ற அத்தனை பிரச்சார கூட்டங்களிலும் மக்களின் ஆதரவோடு தி.மு.க ஆட்சி அமைந்ததும் கொரோனா கால நிதி உதவியாக ரூபாய். 4000 வழங்கப்படும் என அறிவித்தார். ஆட்சி அமைந்ததும் முதல் பணியாக அனைத்து குடும்பங்களுக்கும் ரூபாய் நான்காயிரத்தை இலவசமாக வழங்கி தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்றினார்.

நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் மோடி தான் அவரது கட்சி ஆட்சி அமைந்தால் ஒவ்வொருவர் வங்கி கணக்கிலும் ரூபாய் 15 இலட்சம் போடப்படும் என அறிவித்தார். இன்றுவரை எவர் கணக்கிலும் பணம் வராத நிலையில் இதனை மையமாக வைத்தே பலரின் கிண்டலுக்கும் கேலிக்கும் தான் மோடியின் அறிவிப்பு உதவியது.



பொன்.ராதாகிருஷ்ணன்



மகேஷ்

விரைவில் வரவிருக்கும் நகர்மன்ற உள்ளாட்சித் தேர்தலில் குமரி மாவட்டத்தில் ஒரு பேரூராட்சியை ஆவது வெற்றி பெற்றுவிட வேண்டும் என்ற ஆசையில் தேர்தல் அச்சத்தில் பா.ஜ.கவினர் இத்தகைய பொய்யான சுவரொட்டியை குமரி மாவட்டத்தில் அரசியலில் அநாதையான நிலை. இதுமட்டுமல்லாமல் இத்தகைய செயல் ஒரு மலிவான பிரச்சாரமும் கூட.

பிரதமர் மன்மோகன் ஆட்சியின்போது நம் பொன்னார் ஜூலை 1 போராட்டம் என தொடர்ந்து மூன்று ஆண்டுகள் நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்கம் முன் நாகராஜா திடலில் இரண்டு முறை வீரவேசமாக பேசினார். பா.ஜ.க. ஆட்சி அமைந்தால் கிறிஸ்தவ, இஸ்லாமிய பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை கொடுப்பதுபோல் இந்து மாணவர்களுக்கும் கல்வி உதவித்தொகை கிடைக்க மத்திய அரசு ஆணையிடும் என தெரிவித்த அவர் மோடி அமைச்சரவையில் இரண்டாவது முறையாக இணை அமைச்சராக 5 ஆண்டுகள் பதவி வகித்தபோது ஜீலை 1ம் தேதி போராட்டத்தை பொன்னாரே மறந்துவிட்டார். இதுதான் பா.ஜ.க.




இந்திய இளைஞர்களுக்கு ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படும் என மோடி அறிவித்தாரே. இந்த 7 ஆண்டுகளில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது? சுவரொட்டி ஒட்டுபவர்கள் இந்த கேள்விக்கும் பதில் சொல்ல வேண்டும்.

மோடி ஆட்சியின் சாதனை தினம்தினம் மக்கள் படும் வேதனை தான் மிச்சம். எரிவாயுவின் விலை, பெட்ரோல் டீசல் விலை உயர்வு தினம் தினம் உயர்த்தி அன்றாடம் காட்சியான சாதாரண மனிதர்களையும் தினம் துன்புறுத்தும் செயலைத்தான் கடந்த 7 ஆண்டு மோடி ஆட்சியின் இந்தியா முழுவதும் காண்கின்ற ஆட்சி. இந்த நிலையை போக்க நடைபெறவிருக்கும் 5 மாநில சட்டமன்ற தேர்தலை வடமாநில மக்கள் மோடிக்கு தோல்வியை பரிசாக கொடுக்க வேண்டும் இதுவே தமிழகத்தின் பிரார்த்தனை" எனவும் தெரிவித்தார்.

குமரியில் பொதுமக்கள் மத்தியில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இந்த சுவரொட்டிகள் வெளிப்படுத்துவது விழிப்புணர்வா? அல்லது இயலாமை குறித்த நிலைப்பாடா? என தெரிந்துகொள்ள முன்னாள் இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் அலுவலகத்திற்கு அவரது நேர்முகத்துக்காக பலமுறை தொடர்பு கொண்டபோது கிடைத்த ஒற்றைப்பதில் அண்ணாச்சி சென்னையில் இருக்கிறார் என்பது மட்டுமே தொடர்ந்து கிடைத்த பதில். ■

● எம்.ஆர்.ராஜா

# கறார்... கமிஷன்... கண்டிஷன் போடும் சேர்மன்!

ஓம் சிவசக்திவேல்



**சமீபத்தில் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் நின்று விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் ஒன்றிய சேர்மனாக ஆனார் ஓம் சிவசக்திவேல். அதிலிருந்து நான் சொல்றதைதான் நீங்கள் கேட்கணும் என்பதோடு, கறாராக கமிஷன் கொடுக்கணும் என்று கண்டிஷன் போடுகிறாராம் சேர்மன். இப்படி இவர் மீது பல புகார்கள் வந்த வண்ணமாக இருந்தது.**

இதுகுறித்து திமுக வட்டாரத்தில் பேசினோம். "திருவெண்ணெய்நல்லூர் ஒன்றிய சேர்மனாக இருக்கும் ஓம்சிவசக்திவேல், ஆரம்பத்துல 2006ல் சுயேட்சையாக நின்னு, திமுக கவுன்சிலர் ஆகிட்டாரு. ஆனால் சேர்மன் பதவியை காங்கிரஸ்க்கு ஒதுக்கிட்டாங்க. ஓம்சிவசக்திவேல் திமுகவில் கட்சி உறுப்பினராக மட்டும் தான் இருக்கார், மற்றபடி கட்சியில் வேற எந்த பதவியிலும் இல்ல.

திமுக அமைச்சர் பொன்முடியுடன் இருக்கும் கோதா குமாரின் மாமியார் வீட்டு உதவியாளராக இருந்தவர்தான் இந்த ஓம் சிவசக்திவேல், அதனால் கோதா குமார் குடும்பத்தில் நெருக்கமான நபராக வலம் வந்தார். கோதா குமார் குடும்பத்தினர் பரிந்துரை பேரில்தான், ஓமசிவசக்திவேலுக்கு ஒன்றிய கவுன்சிலர் சீட்டு கிடைத்து வெற்றியும் பெற்றார். இவரை ஆட்டி வைப்பதே கோதா குமார்தான்.

திருவெண்ணெய்நல்லூர் ஒன்றிய சேர்மன் ரிசர்வு என்பதால் திமுகவில் கவுன்சிலராக வெற்றி பெற்றவர்கள் பலர் சேர்மனாக ஆகவேண்டுமென பலமாக முயற்சித்தார்கள். ஆனால் கோதா குமார் குடும்பத்தின் பரிந்துரை பேரில் திருவெண்ணெய்நல்லூர் சேர்மன் பதவியை ஓம் சிவசக்திவேல் கைப்பற்றுகிறார். இதனால் திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்திலுள்ள திமுகவினர் அதிருப்தியில் உள்ளார்கள்.

இவர் ஜெயிச்சி சேர்மன் பதவிக்கு வந்ததில் இருந்து, ஒரே அட்டகாசம் தான் ஆபீஸ்ல. சேர்மன் கூட இருக்குற மூணு பேர்தான் ஆபீஸில் ஒரு கலக்கு கலக்கிட்டு இருக்காங்க.

ஏ2 அக்கௌன்டன்ட் இளையராஜா, ஏ2 அன்பு என்கிற அன்பரசன், ஏற்கனவே இருந்த பிடிஓ ராம்குமார், இவங்க மூணு பேரும் தான் சேர்மன் கூட சேர்ந்து இருக்கிறது. இவங்க வச்சதுதான் ஆபீஸ்ல சட்டமே. எலெக்ஷன் செலவுக்கு 53 லட்சம் ஒதுக்கினார்கள், அந்த செலவு கணக்கு பணத்தில் பிடிஓ 10% கமிஷன், அக்கவுண்டண்ட் 5% கமிஷன், சேர்மனுக்கு 10% கமிஷன் என மொத்தம் 25% கமிஷன் அடிச்சிருக்காங்க எலக்சன் செலவு கணக்கில்.

இது மட்டுமில்லாமல் மழையால் பாதிக்கப்பட்ட மழவராயனூர் ரோடு க்கு, ரோடு போட 5.50 லட்சம் போட்டு, 3.25 ல்லயே வண்டி கணக்கு தீர்த்தது, பைப் வாங்கினது என 3.25 லட்சத்துல கணக்கை முடிச்சிட்டாங்க.

அதேபோல கண்ணராம்பட்டு ரோடு, சின்ன எடையார் ரோடு, மழவராயனூர் ரோடு என மூன்று ரோட்டுக்கும் சேர்த்து 12லட்சம் னு போட்டிருக்காங்க. எல்லாத்துக்கும் 10% கமிஷன் கறாரா கேட்டு வாங்கிடுவார் சேர்மன்.

இதுமட்டுமில்லாமல் உள்ளாட்சி எலெக்ஷன்க்கு முன்னாடி நடந்த ஒர்க் பில்லுக்கு கூட 3%, 4% கமிஷன் கொடுத்தாதான் கையெழுத்து போடுவேன்னு சொல்லிடுவார். இப்போ நடக்கிற ஒர்க்குக்கு 10% கமிஷன்.. என சேர்மன் கேட்பார். கமிஷன் வாங்கித்தர்ற வேலையெல்லாம் ஏ 2 இளையராஜா வும், அன்பரசனும்தான் கவனிச்சிக்கறாங்க.சேர்மன்க்கு கொடுங்க என ஒப்பனாகவே கேட்டு வாங்குவாங்க.. ஏற்கனவே இருந்த பிடிஓ ராம்குமாரை மாத்திட்டாங்க. இல்லனா அவர்க்கும் கமிஷன் குடுக்கணும்.

மேலும் (ஜென்ரல் ஃபண்ட் ) பொதுநிதியாக இருந்தாலும் சரி, எந்த நிதியாக இருந்தாலும் சரி, பிடிஓ ஆபீஸ்ல கையெழுத்து ஆகணும்னா எல்லாத்துலயும் கமிஷன்தான். அது சொந்த கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி 10% கமிஷன் தான். எந்த தயவு தாட்சண்யமும் கிடையாது.

இதனால் கட்சிக்காரர்கள் எல்லாரும் சேர்மன் மேல அதிருப்தியில் இருக்காங்க.அத்தனை கிளைக்கழக நிர்வாகிகளும் சேர்மன் ஓம்சிவசக்திவேல் மீது மிகவும் அதிருப்தியில் இருக்காங்க. இதனால் வருகின்ற எம்.பி எலெக்ஷன், அடுத்து வரும் சட்டமன்ற எலெக்ஷனாக இருந்தாலும் சரி, ஓம்சிவசக்திவேலால் கட்சிக்கு பாதிப்பு ஏற்படும்” என்கிறார்கள்..



பொன்முடி

இதுகுறித்து சேர்மன் ஓம்சிவசக்திவேலிடம் தொடர்பு கொண்டு விளக்கம் கேட்டோம்.“யார்கிட்ட நான் கமிஷன் கேட்டேன், எவ்ளோ கேட்டேன்னு ஆதாரம் வெச்சுருக்காங்களா? இதற்கெல்லாம் நான் பயப்படற ஆளா, ஆதாரத்தோட நிரூபிக்க சொல்லுங்க.

கட்சிக்காரங்க வருவாங்க, அவங்க பொண்டாட்டிக்கு வேலை, பிள்ளைக்கு வேலை, அவங்களுக்கு 2லட்சம் ஒர்க், 3 லட்சம் ஒர்க்குனு கேட்பாங்க. அதுபோல கேட்கிறவங்களுக்குலாம் செஞ்சு தர முடியுமா? முடிஞ்சளவுக்கு செய்வோம். கேட்டதை செய்யலைனா, உடனே வேணும்னே கமிஷன், கம்பளைண்ட் என்று குறை சொல்ல வேண்டியது. அதிருப்தி ஏற்படறது. இதான் காலம் காலமாக சொல்லிட்டு இருக்கிறது.. எனக்கு மடியில் கனம் இல்லை, அதனால் வழியில் பயம் இல்லை. இது போதாதுன்னு பிடிஓ க்கு போன் பண்ணி சேர்மன் கூட சேர்ந்துகிட்டு பண்றிங்களானு பிடிஓவை மிரட்டுவாங்க.

உதாரணமாக எலெக்ஷன் பில் போடறாங்க. எலெக்ஷன் வேலை செய்யறோம்னு ஒப்பந்தத்துல கையெழுத்து போட்டுதான் வேலை செய்றாங்க.. பண்ட் வந்திருக்காது.. பணம் கேட்பாங்க..ஆனால் எலெப்ஷன் ஃபண்டே வராம எப்படி பணம் கொடுக்கறது?

ஆனால் நாம மனிதாபிமான அடிப்படையில பாவம் கூலிக்கு ஆட்கள் வெச்சு வேலை செஞ்சிருக்காங்க.. அவங்க அன்றாடம் சாப்பாட்டுக்கே கஷ்டப்படறவங்க கூலி ஆட்களாச்சேன்னு, இவங்க செஞ்ச ஒர்க்குக்கு பணம் வரலைனாலும், ஜெனரல் ஃபண்ட் ல இருந்து பணம் எடுத்து கொடுத்திடுவோம்.

இதுக்கு கூட மற்ற கவுன்சிலர்லாம் ஏன் இந்த ஃபண்ட் பணத்தை, அந்த ஃபண்ட் க்கு கொடுக்கறீங்க, அந்த பணத்துக்கு எங்களுக்கு புதுசா ஏதாவது ஒர்க் குடுக்கலாம்னு கேட்பாங்க.

எலெக்ஷன்ல ஜெயிச்சு வந்திருக்கோம். நம்மால் முடியறத செய்வோம், அவங்களும் சந்தோஷமா இருக்கட்டும் னு சொல்லி சமாதானம் செய்வேன்.. ஆனால் நல்லது செய்யற நம்மளையே குறை சொன்னா எப்படி?” என்றார்.

நெருப்பில்லாமல் புகையுமா..? ■

## –இது திருவெண்ணைநல்லூர் களேபரம்



## ஷங்கரின் அடுத்த வரவு!

பிரம்மாண்ட இயக்குநர் ஷங்கரின் இளைமகள் அதீதி மருத்துவ படிப்பை முடித்த கையோடு, திரைத்துறையில் களமிறங்கினார். இந்நிலையில் ஷங்கரின் மகனும் ஹீரோவாக களமிறங்குகிறார். பாலாஜி சக்திவேல் இயக்கத்தில் 2004 இல் வெளியான திரைப்படம் காதல். இப்படத்தில் பரத், சந்தியா நடித்திருந்தனர். இப்படம் மிகப்பெரிய வெற்றி அடைந்ததுடன் பரத், சந்தியா இருவருக்குமே மிகப்பெரிய பெயரை வாங்கிக் கொடுத்தது. தற்போது பாலாஜி சக்திவேல் காதல் படத்தின் இரண்டாம் பாகத்தை எடுக்க உள்ளார். இப்படத்தில் ஹீரோவாக ஷங்கரின் மகன் அர்ஜித் நடிக்க உள்ளார். காதல் படத்தில் பரத் மெக்கானிக்காக அழுக்கு பனியனுடன் சுற்றுவார். ஆனால் அர்ஜித் ரொம்ப பர்சனாலிட்டி ஆகவும், ஸ்டைலிஷ் ஆகவும் இருக்கக்கூடியவராம். இதனால் காதல் 2 படம் எப்படி எடுக்க போகிறார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## ரசிகர்களை கவர்ந்த டைட்டில் லுக்!

பிக் பாஸ் நிகழ்ச்சி மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர் ஷிவானி நாராயணன். பிக் பாஸ் வீட்டில் இருந்து வெளியேறியதில் இருந்தே ஷிவானிக்கு சினிமா வாய்ப்புகள் குவிந்து வருகின்றன. இன்ஸ்டாகிராமில் கவர்ச்சி புகைப்படங்களை பதிவிட்டு ரசிகர்களின் தூக்கத்தை கெடுத்து வரும் ஷிவானி நாராயணன் விரைவில் சினிமா ஹீரோயினாக மாறி இளைஞர்களை கவர காத்திருக்கிறார். சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் இயக்குநர் பொன்ராம் இயக்கத்தில் விஜய்சேதுபதி நடித்து வரும் படத்தில் போலீஸ் அதிகாரியாக நடித்து வரும் ஷிவானி மேலும், இரு படங்களில் கமிட் ஆகி உள்ளார். ஆர்.ஜே. பாலாஜிக்கு ஜோடியாக ஒரு படத்திலும், 8 தோட்டாக்கள் படத்தின் நாயகன் வெற்றி நடிக்கும் பம்பர் படத்திலும் நடிகை ஷிவானி ஹீரோயினாக மாறியுள்ளார். அறிமுக இயக்குநர் செல்வகுமார் இயக்கத்தில் உருவாகி வரும் இந்த படத்தின் டைட்டில் லுக் குடியரசு தினத்தன்று வெளியாகி, ரசிகர்களை உற்சாகமடைய வைத்திருக்கிறது.

## குவியும் ஹிந்தி வாய்ப்புகள்!

ஒரு படத்தில் ஒரு பாடலுக்கு மட்டும் குத்தாட்டம் ஆடினால் மார்க்கெட் குறைந்து விடும் அல்லது தொடர்ந்து ஒரு பாடலுக்கு மட்டுமே நடனமாட அழைப்பார்கள் என்ற பயத்தால் எந்த நடிகையும் இதற்கு சம்மதிக்க மாட்டார்.ஆனால் இதை மிகவும் தைரியமாக ஏற்று கொண்ட டாப் நடிகை சமந்தா முதன் முறையாக புஷ்பா படத்தில் ஒரே ஒரு ஐட்டம் பாடலுக்கு குத்தாட்டம் போட்டார். பிற நடிகைகள் நினைத்ததைவிட எதிர்மறையாக இந்த பாடல் பயங்கர ஹிட்டானது. யாரும் எதிர்பாராத வகையில் அனைத்து தரப்பு ரசிகர்களும் இந்த பாடலை கொண்டாட தொடங்கி விட்டார்கள். தற்போது இந்த பாடலால் சமந்தாவின் மார்க்கெட் எங்கோ சென்று விட்டது. அதுமட்டுமல்ல இந்த ஒரு பாடலுக்காக சமந்தா 5 கோடி ரூபாய் வரை சம்பளம் பெற்றதாகவும் கூறப்படுகிறது. இதுதவிர இந்த பாடல் காரணமாக சமந்தாவிற்கு தற்போது ஹிந்தி பட வாய்ப்புகள் குவிந்து வருகிறதாம்.

# அம்மாவை ஓரங்கட்டிய...

தமிழ் சினிமாவில் பிரபல நடிகையாக இருந்தவர் ஸ்ரீதேவி இவரது நடிப்பில் வெளியான படங்கள் அனைத்துமே ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றன.தற்போது அவரது மகள் ஜான்வி கபூர் ஹிந்தியில் ஒரு சில படங்களில் நடித்து வருகிறார். இவருக்கு தற்போது ஏராளமான படங்களில் நடிப்பதற்கான வாய்ப்புகள் குவிந்து கொண்டிருக்கின்றன. நல்ல கதையம்சம் உள்ள படங்களை மட்டுமே தேர்வு செய்து நடித்து வருகிறார்.ஹிந்தி திரையுலகில் இருக்கும் நடிகைகள் அனைவரும் கவர்ச்சி காட்ட தயங்கியதில்லை அந்த வரிசையில் ஜான்வி கபூர் தொடர்ந்து பல கவர்ச்சியான புகைப்படங்களை வெளியிட்டு வருகிறார். ஆனால் அதிகமான கவர்ச்சியான புகைப்படங்களை வெளியிட்டு வருவதால் ரசிகர்கள் பலரும் அதிர்ச்சியில் உள்ளனர். ஸ்ரீதேவி சினிமாவில் தனக்கென தனி இடம் பிடித்துள்ளார். ஆனால் அவரது மகள் தொடர்ந்து கவர்ச்சியான புகைப்படங்களை வெளியிடுவது பார்க்கும்போது ஜான்வி கபூரால் ஸ்ரீதேவிக்கு கெட்ட பெயர் தான் வரும் என பலரும் கூறி வருகின்றனர். ஆனால் ஜான்வி கபூர் அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல் தனக்கு தோன்றியதை எல்லாம் செய்து வருகிறார்.




கே.ஆர்.உதயகுமார்







# நீலகிரியில் மீண்டும் தொடங்கிய கனிமவளக் கொள்ளை?



> நீலகிரி மாவட்டம் சூழலியல் முக்கியத்துவம்வாய்ந்த மாவட்டம். இங்கு சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையிலும், நிலச்சரிவு அபாயத்தைத் தடுக்கும் வகையிலும் பல கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளன.

அதன்படி ஆழ்துளைக் கிணறு அமைக்கவும், பாறைகளை உடைக்கவும், பொக்லைன் இயந்திரங்களை இயக்கவும் கடுமையான விதிமுறைகளும் தடைகளும் உள்ளன. இந்த விதிகளை மீறி, சுற்றுச்சூழலை பாதிக்கும் வகையில் பணிகளை மேற்கொள்வோர்மீது கடுமையான நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டுவருகிறது. முந்தைய காலக்கட்டத்தில் சர்வ சாதாரணமாக நடந்து வந்த கனிம வளக்கொள்ளை சம்பவங்கள் கடந்த சில ஆண்டுகளாக குறைந்து காணப்பட்டது. இந்நிலையில் தற்போது மீண்டும் விஸ்வரூபமெடுத்துள்ளது.

ஊட்டி அருகே உள்ள தொட்டபெட்டா ஊராட்சிக்குட்பட்ட கோழிப்பண்ணை பகுதியில் 3.88 ஹெக்டேர் தனியார் பட்டா நிலம் மற்றும் 9.76 ஹெக்டர் அரசு நிலத்தில் தடையை மீறி பாறைகளை வெடிவைத்து தகர்த்ததோடு, உடைக்கப்பட்ட 2,500 பாறைக் கற்களைக்கொண்டு கனரக வாகனங்கள் செல்லும் சாலையும் அனுமதியின்றி 220 மீட்டர் நீளத்துக்கு அமைக்கப்பட்டிருப்பதும் தெரியவந்திருக்கிறது. இந்த விதிமீறல் குறித்து ஒருவர்மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.



அம்ரித்

ஊட்டி, புதுமந்து அருகிலுள்ள கிருஷ்ணன் என்பவரது மகன் கோபால் என்ற நபர் விதிமீறி பாறைகளை வெடிவைத்து தகர்த்திருப்பது கண்டறியப்பட்டது. அதே பகுதியில் குவித்துவைக்கப்பட்டிருந்த கருங்கற்களில் அடையாளமாக எண்ணிடப்பட்டது. தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையில், தனியார் பட்டா நில உரிமையாளரான





கோழிப்பண்ணை பகுதியைச் சேர்ந்த கோபால் என்பவர், அவருக்குச் சொந்தமான நிலத்திலும், அரசு நிலத்திலும் அனுமதியின்றி பாறைகளை உடைத்து அரசு சொத்துகளை சேதப்படுத்தியது உறுதிசெய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து ஊட்டி புதுமந்து காவல் நிலையத்தில் கோபால்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பாறைகள் விதிமீறி உடைக்கப்பட்டிருப்பது குறித்து நீலகிரி மாவட்ட ஆட்சியர் அம்ரித் கூறுகையில், “பாறைகள் உடைக்கப்படுவதாக வந்த புகாரின் அடிப்படையில் ஆய்வுசெய்ததில், சட்டவிரோதமாக பாறைகள் உடைக்கப்பட்டது தெரியவந்தது. இது தொடர்பாக ஒருவர்மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. புவியியல் மற்றும் கனிம வளத்துறையினரை ஆய்வுசெய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்கள் அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் ஆர்.டி.ஓ மூலம் அபராதம் விதிக்கப்படும்" என்றார். ■


வார இதழ்
தமிழக அரசியல்
புதியதோர் உலகம் செய்வோம்

## சந்தா படிவம்

**ஆண்டு சந்தா ரூ. 940/-**

சந்தா தொகையினை டி.டி. மூலம் செலுத்துவோர் **JSK PUBLICATIONS** என்ற பெயரில், சென்னையில் மாற்றத்தக்க **(Payable at Chennai)** வகையிலும், காசோலை மூலம் செலுத்துவோர் **JSK PUBLICATIONS** என்ற பெயரிலும் வழங்க வேண்டும். கீழ்கண்ட படிவத்தைத் தெளிவாக நிரப்பி அனுப்ப வேண்டும். உங்களின் முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடுவது மிகமிக அவசியம். டி.டி. அல்லது காசோலை அனுப்ப வேண்டிய முகவரி:

**# 47, கிரியப்பா சாலை, தி.நகர், சென்னை – 600 017. தமிழ்நாடு. ☎ 044 – 43511883**

ஆன்லைன் மூலம் சந்தா செலுத்துவோர் கீழ்கண்ட வங்கி கணக்கில் செலுத்தவும்.

| | | |
|---|---|---|
| Name | : | JSK PUBLICATIONS |
| Account No | : | 6869274765 |
| Bank Name | : | INDIAN BANK |
| IFSC No | : | IDIB000T020 |
| Branch | : | Thousand Lights |

சந்தா தொடர்பான சந்தேகங்களுக்கு **044 - 43511883** என்ற எண்களை தொடர்புகொள்ளவும்.

### சந்தாதாரர் படிவம்

பெயர்:....................................................................................

முகவரி:..................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

.........................................பின்கோடு:....................................

தொடர்பு எண்:.......................................................................

### சந்தா தொகை செலுத்திய விவரம்

டி.டி./காசோலை எண்:............................தேதி:.........................

தொகை:........................ வங்கியின் பெயர்:...............................


..............................................................................................

கிளை:.....................................................................................

* நிபந்தனைகளுக்குட்பட்டது.

● ராகுல்

# ஹரி நாடாரை கைவிட்ட பனங்காட்டு படை..!



ஹரிநாடார்

**கடந்த 2019 இடைத்தேர்தலில் நான்குநேரி தொகுதியிலும் 2021 சட்டசபை பொதுத் தேர்தலில் ஆலங்குளம் தொகுதியிலும் பனங்காட்டு படை கட்சியின் சார்பாக களம் இறங்கி கலக்கியவர் ஹரிநாடார்.**

பெங்களூரு தொழில் அதிபர் ஒருவர் கொடுத்த புகாரின் பேரில் கைது செய்யப்பட்ட ஹரி நாடார் பெங்களூரு பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டார். அதன் பிறகு நடிகை விஜயலட்சுமி கொடுத்த புகாரின் பெயரில் திருவான்மியூர் போலீசார் பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் இருந்து அவரை கைது செய்து தமிழ்நாடு அழைத்து வந்து சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி தற்பொழுது பூந்தமல்லி கிளைச் சிறையில் அடைத்துள்ளனர். இந்த நிலையில் ஹரி நாடாரை பனங்காட்டு படை கட்சியில் இருந்து நீக்குவதாக அறிவித்து ஹரி நாடாருக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளார் ராக்கெட் ராஜா.

இப்போதைய தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகில் உள்ள மேல இலந்தைகுளம் என்ற ஊரைச் சார்ந்தவர் ஹரி நாடார். இவர் ஒரு கட்டத்தில் சென்னைக்கு இடம் பெயர்ந்து நாடார் சங்க செயல்பாடுகளில் பங்கேற்றததோடு, பைனான்ஸ் தொழிலிலும் ஈடுபட்டு வந்தார்.

ஜெயலலிதா தமிழக முதல்வராக இருக்கும் பொழுது அவரால் ராஜ்யசபா எம்பியாக நியமிக்கப்பட்ட சசிகலா புஷ்பா என்பவரை திடீரென்று கட்சியை விட்டு நீக்கினார் ஜெயலலிதா. அத்துடன் அவர் ராஜ்யசபா எம்பி பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று அழுத்தம் கொடுத்தாகவும் கூறப்பட்டது. ஆனால் ராஜ்யசபா எம்பி பதவியை ராஜினாமா செய்ய முடியாது என்று மறுத்த சசிகலா புஷ்பா, ஜெயலலிதாவை எதிர்த்து குரல் கொடுத்தார். அந்த நேரத்தில் சில நாடார் சங்க பிரமுகர்கள் சசிகலா புஷ்பாவிற்கு ஆதரவு கொடுத்தனர். அப்போது அவருக்கு பின்னணியில் செயல்பட்டவர்களில் ஒருவராக அறிமுகம் ஆனார் ஹரி நாடார்.

ஆரம்பத்தில் நாடார் மக்கள் சக்தி இயக்கம் என்ற ஒன்றினை ஆரம்பித்து இயங்கிக் கொண்டிருந்தார். அதன் பிறகு நாடார் சமுதாயத்திற்கு என்று ஒரு வலுவான அரசியல் கட்சி தேவை என்று இவர் மற்றும் ராக்கெட் ராஜா, சுபாஷ் பண்ணையார் ஆகியோர் இணைந்து பனங்காட்டு படை என்ற கட்சியை உருவாக்கினார்கள். ஒரு கட்டத்தில் சுபாஷ் பண்ணையார் பனங்காட்டு படை கட்சியிலிருந்து விலகிக் கொள்ள ராக்கெட் ராஜாவும், ஹரி நாடாரும் இணைந்து கட்சியில் செயல்பட்டு வந்தார்கள்.

ஹரி நாடார் பனங்காட்டு படை கட்சியின் தென்மண்டல ஒருங்கிணைப்பாளராக பதவியேற்று செயல்பட்டு வந்தார்.பனங்காட்டு படை கட்சியின் சார்பாக கடந்த 2019 நாங்குநேரி தொகுதி இடைத்தேர்தலில் களம் இறங்கி 4700 வாக்குகள் பெற்றார் ஹரி நாடார். அதன்பிறகு பனங்காட்டுப்படை செயல்பாடுகள் வேகம் பிடித்தன. கடந்த 2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் நெல்லை மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியில் பனங்காட்டு படை வேட்பாளராக களம் இறங்கினார் ஹரி நாடார். ரோல்ஸ் ராய்ஸ், ஜாகுவார் போன்ற ஆடம்பர கார்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர் ஒரு கட்டத்தில் ஹெலிகாப்டரில் வந்து தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார். அந்தத் தேர்தலில் 37,000 வாக்குகளுக்கும் அதிகமாக பெற்று அனைவரின் கவனத்தையும் திசை திருப்பினார். (இவர் களத்தில் இறங்கியதால்தான் தி.மு.க. வேட்பாளர் பூங்கோதை ஆலடி அருணா



ராக்கெட்ராஜாவுடன் ஹரிநாடார்

வெற்றி வாய்ப்பை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது).

ஆரம்ப கட்டத்தில் சிறிய அளவில் தங்க நகைகளை அணிந்து வலம் வந்தவர் ஒரு கட்டத்தில் மூன்று கிலோவிற்கும் அதிகமான தங்க நகைகளை அணிந்து கிட்டத்தட்ட நடமாடும் தங்க நகைக்கடை போலவே வலம் வந்தார். ஒரு கட்டத்தில் தமிழக சினிமா துறையிலும் கால் பதிக்க துவங்கினார் ஹரி நாடார். சில நடிகைகளோடு இவர் இருக்கும் புகைப்படங்கள் வெளியாகின.

மேலும் வனிதா விஜயகுமார் ஜோடியாக இவர் ஒரு திரைப்படத்தில் நடிப்பதாகவும் தகவல்கள் வெளியாகின. அதன்பிறகு தொடர்ந்து வந்த காலகட்டங்களில் இவர் மீது சில குற்றச்சாட்டுகளும் எழத் தொடங்கியது. பெங்களூருவில் தொழில் அதிபர் ஒருவருக்கு கடன் வாங்கித் தருவதாக கூறி கோடிக்கணக்கில் பணம் பெற்று ஏமாற்றியதாக எழுந்த புகாரின் அடிப்படையில் இவர் கேரளாவில் வைத்து கைது செய்யப்பட்டு பெங்களூரு பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டார். இவர் சிறையில் இருக்கும் பொழுது ஷாலினி என்பவர் தான் ஹரிநாடார் மனைவி எனவும் சமீப நாட்களாக மலேசியாவை சேர்ந்த மஞ்சு என்பவர் தன்னை போன் மூலமாக மிரட்டுவதாகவும் நெல்லை எஸ்பியிடம் மனு கொடுத்தார்.

இந்த தகவல் பெங்களூர் சிறையில் இருந்த ஹரி நாடாருக்கு தெரிய வரவும் அவர் தனது வழக்கறிஞர் மூலமாக நெல்லை எஸ்பிக்கு கடிதம் மூலமாக ஒரு புகாரை அனுப்பினார். அந்த கடிதத்தில் ஷாலினி என்பவர் தான் ஒரு அனாதை என்று கூறியதால் தான் அவரை திருமணம் செய்ததாகவும் ஒரு கட்டத்தில் அவர் பணத்திற்கு ஆசைப்பட்டு தான் தன்னை திருமணம் செய்துள்ளார் என்பதை தெரிந்துகொண்டு அவரிடமிருந்து விலகி விட்டதாகவும் தற்போது விவாகரத்து வழக்கு தொடர்ந்து உள்ளதாவும் அந்த புகாரில் கூறி இருந்தார்.

இந்நிலையில் பத்திரிக்கையாளர்களை சந்தித்த மலேசியாவைச் சேர்ந்த மஞ்சு என்பவர் தான் ஹரி நாடாரின் மனைவி எனவும் தனக்கும் ஹரிநாடாருக்கும் குழந்தைகள் இருப்பதாகவும் பேட்டி அளித்தார். தான் ஹரி நாடாரை சிறையில் இருந்து வெளிக்கொண்டு வருவதற்கு முயற்சிப்பதாகவும் அதற்கு ஹரி நாடாரின் மனைவி என்று கூறும் ஷாலினி தரப்பு இடைஞ்சல் செய்வதாகவும் புகார் கூறினார். மேலும் பனங்காட்டு படை கட்சியிடம் இது குறித்து பேசிய போது அவர்கள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றும் புகார் கூறினார்.

ஹரி நாடாரை பனங்காட்டு படை கட்சி மீட்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மஞ்சு புகார் கூறி வந்த நிலையில் திடீர் என்று பனங்காட்டு படை கட்சியிலிருந்து ஹரி நாடார் நீக்கப்படுவதாக ராக்கெட் ராஜா அறிவித்தார். கட்சிக் கட்டுப்பாட்டை மீறி கட்சிக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் செயல்பட்டதால் ஒழுங்கு நடவடிக்கை குழுவின் அறிவுறுத்தலின் படியும் மாநில, மாவட்ட நிர்வாகிகளின் ஒப்புதல் படியும் ஒருங்கிணைப்பாளர் பதவியிலிருந்து ஹரி நாடார் நீக்கப்படுகிறார். அத்தோடு அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்கப்படுகிறார். ஹரி நாடாரின் கருத்திற்கும்இ செயலுக்கும் இனி கட்சிப் பொறுப்பு ஏற்காது. பனங்காட்டு படை உறவுகள் இனி அவரோடு அரசியல் உறவு வைத்துக்கொள்ள கூடாது என்று அறிவித்து ஹரிநாடார் தரப்பிற்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார் ராக்கெட் ராஜா.

சீமானுக்கு ஆதரவாக தன்னை மிரட்டியதாக ஹரி நாடார் மீது விஜயலட்சுமி கொடுத்த புகாரின் பெயரில் தான் தற்போது ஹரி நாடார் தமிழக காவல்துறையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். தொடரும் தமிழக போலீசார் விசாரணையில் ஹரி நாடார் தரப்பில் இருந்து அளிக்கப்படும் பதில்களை தொடர்ந்து இன்னும் பல கைதுகள் இருக்கலாம் என்று பரபரப்புடன் எதிர்பார்க்கப்படுகிறது. ■


பனங்காட்டுப் படை கட்சி
ஜெ.ராக்கெட்ராஜா
தலைவர்
தேதி 22/01/2022
அறிவிப்பு

# அரசு வழக்கறிஞரை தாக்கிய முன்னாள் அரசு வழக்கறிஞர்?

**புதுக்கோட்டை மாவட்ட குற்றவியல் வழக்குகளில் அரசு தரப்பு வக்கீலாக கடந்த ஆட்சியில் இருந்தவர் சிரஞ்சீவி சீனிவாசன் ஆவார். அதிமுகவை சேர்ந்த சிரஞ்சீவி சீனிவாசன் காரைக்குடி முன்னாள் திமுக நகர் மன்ற தலைவராக இருந்த முத்து துரையின் உடன் பிறந்த தம்பி ஆவார்.**

திமுக முன்னாள் சேர்மனின் தம்பியான சிரஞ்சீவி சீனிவாசன், தற்போதைய காரைக்குடி உரிமையியல் நீதிமன்ற அரசு வழக்கறிஞர் பாலசுப்பிரமணியன் மீது கொலைவெறி தாக்குதல் நடத்திய சம்பவம் காரைக்குடியையே கலகலக்க செய்துள்ளது.

முன்னாள் பீப்பியின் (பப்ளிக் பிராசிகியூட்டர்) இந்த கொலை வெறி தாக்குதல் குறித்து காரைக்குடி வடக்கு காவல் நிலைய போலீஸார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முன்னாள் "பீப்பி" சிரஞ்சீவி சீனிவாசனை "வலைவீசி" தேடி வருகிறார்கள்.

கரண்ட் பீப்பியான பாலசுப்பிரமணியன் மீதான கொலை வெறி தாக்குதல் பிண்ணன் குறித்து நம்மிடம் விரிவாக பேசிய அவரது தரப்பை சேர்ந்தவர்கள் கூறும்போது, "காரைக்குடி வீடு கட்டும் சங்கம், சூடாமண்புரத்தில் சொசைட்டியாக இயங்கி வருகின்றது. 1939 -ல் ஆரம்பிக்கப்பட்ட சூடாமண்புரம் வீடு கட்டும் சொசைட்டியில் 1000 க்கும் மேலான உறுப்பினர்கள் உள்ளார்கள். முதலில் "சுப்பிரமணியபுரம்" ஏரியாவை உருவாக்கி கொடுத்து, நகர மக்களின் நன்மதிப்பை பெற்ற இந்த சொசைட்டி, பிறகு 1984 -ல் சூடாமண்புரத்தை உருவாக்கியது.


மோகன்

இந்த சூடாமண்புரம் ஏரியாவில்தான் 1991 -ல் விக்டர் செபஸ்திக் பாஸ்கரன் என்பவருக்கு 63/4 செண்ட் இடத்தை ஒதுக்கி கொடுத்தது சொசைட்டி. இடத்தை வாங்கிய விக்டர் செபஸ்திக் பாஸ்கரன், பின்னாளில் தனக்கு பண முடை ஏற்பட்ட போது, செட்டிய வீட்டு ஆச்சியான உமையாள் என்பருக்கு "உள்நாட்டு கிரையமாக" தனது இடத்தை கொடுத்தார். உமையாள் பிறகு அதனை மோகன் என்பவருக்கு பதிவு செய்து கொடுத்து விட்டார். ஆச்சியான உமையாள் ஆள், அம்பு, சேனை இல்லாத "அப்பிராணி" என்பதை தெரிந்து கொண்ட முன்னாள் பீப்பியான சிரஞ்சீவி சீனிவாசன்,

ஆச்சி உமையாளை மிரட்டி, மோகனுக்கு உள்நாட்டு கிரயம் போட்ட பத்திரபதிவை ரத்து செய்யுமாறு சொசைட்டிக்கு கடிதம் கொடுக்க சொன்னார்கள். பயந்து போன ஆச்சி உமையாளும், நமக்கெதுக்கு வம்பு என அவர்கள் சொன்னபடியே, சூடாமண்புரம் சொசைட்டிக்கு கடிதம் கொடுத்தார்.

ஆனால் இதனை ஏற்று கொள்ளாத சூடாமண்புரம் சொசைட்டி நிர்வாக தரப்பினர், விருது நகரிலுள்ள தங்களது மாவட்ட பதிவாளருக்கு தகவல் அனுப்பினார்கள். அவர்கள் கொடுத்த ஆணைப்படி, சென்னை உயர்நீதிமன்றத்தில் சொசைட்டி தரப்பினர் உள்நாட்டு கிரயம்

செல்லாது என அறிவிக்க கோரி ரிட் மனு தாக்கல் செய்தார்கள்.

இந்த ரிட் மனு தீர்ப்பு வருவதற்கு முன்பாகவே, சிரஞ்சீவி சீனிவாசன் விக்டர் செபஸ்திக் பாஸ்கரனை மீண்டும் தூண்டிவிட்டு, மேற்படி இடத்தை வெள்ளைச்சாமி என்பவருக்கு பவர் கொடுக்க உத்தரவிட்டார். பவர் வாங்கிய வெள்ளைச்சாமி, ஏற்கனவே ஆச்சி உமையாளிடம் உள்நாட்டு கிரையம் பெற்று இருந்த மோகன், அந்த இடத்தில் போட்டிருந்த ஓட்டு வீட்டை அடித்து உடைத்து நொறுக்கி விட்டார்.

இந்த சம்பவம் நடந்த மறுநாளே சென்னை உயர்நீதிமன்றம், உமையாள் கொடுத்த உள்நாட்டு கிரையம் செல்லாது என அதிரடி தீர்ப்பு வழங்கியதோடு மட்டுமல்லாமல், 4 வார காலத்துக்குள் அந்த 63/4 செண்ட் இடத்தையும் சொசைட்டி மீட்டு தன்வசப்படுத்த வேண்டும் என அதிரடி தீர்ப்பு வழங்கியது.



முத்துதுரை



சிரஞ்சீவி சீனிவாசன்

அண்ணன் முன்னாள் திமுக காரைக்குடி நகர்மன்ற தலைவரான முத்துரையே தன்மீதே கொலை வெறி தாக்குதல் நடத்த வந்ததாக புகார் செய்து, அந்த புகார் மீது எப்.ஐ.ஆர் போடப்பட்டு நிலுவையில் உள்ளது.

மேலும் கோர்ட் வளாகத்தில் சக வழக்கறிஞர்களை மிரட்டியது குறித்தெல்லாம் ஏராளமான வழக்குகள் நிலுவையில் உள்ளது. கடந்த அதிமுக ஆட்சியில், தனது சொந்த ஊரான "உஞ்சனை" பிண்ணனியை வைத்து இவர் ஆட்டம் போட்டு வந்தார். ஆனால் தற்போதைய திமுக ஆட்சியில், இவர் மீதான "பிடி" இறுகி விட்டதால், இனி மேல் இவர் ஆட்டம் போட முடியாது" என்றார்கள் திட்டவட்டமாக.

தற்போது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்ட நிலையில், சிரஞ்சீவி சீனிவாசன் தலைமறைவாகி விட்டார். ஆனால் அவரது தரப்பை சேர்ந்தவர்கள் நம்மிடம் கூறும்போது,

இந்த தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என காரைக்குடி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு போட சென்ற போதுதான் கரண்ட் "பீப்பியான" பாலசுப்பிரமணியத்தை, முன்னாள் பீப்பியான சிரஞ்சீவி சீனிவாசன் கோர்ட் வளாகத்துக்குள்ளேயே கொலை வெறி தாக்குதல் நடத்தியுள்ளார்" என்றார்கள்.

சிரஞ்சீவி சீனிவாசன் குறித்து நம்மிடம் பேசிய காவல் துறையினர், "தடாலடி பேர்வழியான இவர் மீது இவரது உடன்பிறந்த

## –கலகலக்கும் காரைக்குடி!

"வர உள்ள ஊரக உள்ளாட்சி தேர்தலில் காரைக்குடி நகர்மன்ற தலைவராக வருவதற்கு முன்னாள் சேர்மன் முத்து துரைக்கு அதிக வாய்ப்பு உள்ளது. இதனை கெடுக்கவும், தடுக்கவும் செய்யத்தான் அவரது அரசியல் எதிரிகள், சிரஞ்சீவி சீனிவாசன் விவகாரத்தை ஊதி பெரிதாக்குகிறார்கள்.

மிகவும் நேர்மையான, மனசாட்சிப்படி அரசு வழக்கறிஞராக அப்பழுக்கில்லாமல் பணிபுரிந்துள்ள சிரஞ்சீவி சீனிவாசன் மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளையெல்லாம் அவர் நீதிமன்றத்தில் தவிடு பொடி ஆக்கி வெளியே வருவார்" என்றார்கள் தீர்க்கமாக.

இதில் உள்ள "அரசியல் பிண்ணனி" குறித்தெல்லாம், மர்ம முடிச்சுகள் அனைத்தையும் போலீஸார் விசாரித்து வெளிக்கொண்டு வந்தால் மட்டுமே, உண்மை அனைத்தும் ஊரறிய வெட்ட வெளிச்சமாகும். ■



● பொன்.சௌபா

# மதுரையில் 'மீனாட்சி' ஆட்சி...

> உள்ளாட்சித்தேர்தல் நடத்த தடையில்லை உயர்நீதி மன்றம் அறிவித்த அறிவிப்பு, கடந்த பத்து ஆண்டுகளாக கவுன்சிலர் பதவிக்கான கனவில் வலம்வந்து கொண்டிருந்தவர்களுக்கு புதிய தெம்பினை ஊட்டியுள்ளது. ஆனால் மதுரை மேயர் பதவி பெண்களுக்கு ஒதுக்கப்பட்டதால் ஆளும் எதிர்க்கட்சித்தரப்பில் சிறிது தயக்கத்தை ஏற்படுத்தினாலும், தொடர்ந்து நமக்கு இல்லையெனினும் குடும்ப உறுப்பினர்களை பதவியில் அமர்த்தி விடலாம் என டபுள் ஸ்பீட் எடுக்கத்துவங்கியுள்ளது களம்.

மதுரையில் தற்போது ஆளும் கட்சி தரப்பில் தெற்கு மாவட்டச் பொறுப்பாளர் தளபதியின் மகள் மேகலா ரேசில் உள்ளார், அதற்கடுத்து முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கத்தின் மருமகள் பொன் சேதுவின் மனைவி, விஜய்மோஸ்னி, முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜிவை எதிர்த்துப் போட்டியிட்டு தோல்வியடைந்த சின்னம்மாள், இவருக்கு அமைச்சர் பிடிஆர் தியாகராஜன் ஆதரவு உள்ளது, மற்றொரு அமைச்சரான மூர்த்தியின் ஆதரவாளர் நாராயணபுரம் முன்னாள் கவுன்சிலர் சசிக்குமார் மனைவி வாசுகியுடன், ஆனையூர் பகுதிச்செயலாளர் பொம்மத்தேவன் மகள் ரோகிணி போன்றோர் சீட்பெற முயற்சி செய்துவருகின்றனர்.



விஜய்மோஸ்னி

எதிர்க்கட்சியான அதிமுகவில் செல்லூர் ராஜீவின் இரண்டாவது மகள், ராஜன்செல்லப்பாவின் மருமகள் வனிதா, உள்ளிட்டோரும், பாஜகவில் எம்.எல்.ஏ.வில் தோற்ற மாவட்ட அமைப்பாளர் மஹாலெட்சுமி போன்றோரும் களத்தில் உள்ளனர். இவர் பாஜகவில் மாநில மகளிர் அணி தலைவர், தேசிய மின்தொகுப்பு மைய கழக அலுவல்சாரா இயக்குனர் போன்ற பொறுப்புக்களை வகித்து வருகிறார்.

ஆளும்கட்சி, பெண்களுக்கான இலவச பஸ் பயணம், பொங்கல் தொகுப்பு உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களினால் மக்களிடம் பெற்றுள்ள நல்ல பெயருடன் எளிதாக வென்றுவிடலாம் என்ற நினைப்பில் திமுகவினரும், கூட்டணி கட்சியினரும் கவுன்சிலர் வேட்பாளர் கனவில் வலம்வந்து கொண்டிருக்கின்றனர். எதிர்க்கட்சியாக வீற்றிருக்கும் அதிமுகவில் கவுன்சிலர்

வேட்பாளர்களுக்கு போட்டியிடுவதில் சுணக்கம் பல இடங்களில் அதிகரித்துள்ளது. டிடிவி, சசிகலா மேலுள்ள அதிருப்தி தங்களுக்கு சாதகமாக விழும் என்று எதிர்பார்த்தாலும், செலவு செய்து வெற்றி பெற்று அதன் மூலமாக சாதிக்க இயலும் என்ற நிலை ஐயப்பாட்டிலுள்ளதால் சம்பாதித்த பணத்தினை இழக்கும் மணநிலையில் அதிமுக கூடாரத்தில் ஓசை கேட்கிறது. பல தொகுதிகளில் அமமுக பிரிக்கும் வாக்குகளால் எளிதாக திமுக உள்ளாட்சி தேர்தலை வெற்றி கொள்ளும் என்பதே தற்போதைய களநிலவரம்.

ஆளும் திமுகவை மீறி வெற்றி பெறுவது என்பது சிரமம் எனும் நிலையில் வெற்றி பெற்றாலும் தங்கள் பகுதிக்குத் தேவையானவற்றைச் செய்வதற்கு ஆளும் அரசு உதவுமா என்பது மில்லியன் டாலர் கேள்வி! கடந்த திமுக ஆட்சியில் உள்ளாட்சித்தேர்தலில் அழகிரியின் கை ஓங்கியிருந்த காலத்தில் தேர்தல் எவ்வாறு நடந்தது என்பதை கண்முன்னால் பார்த்தவர்களுக்கு, தற்போதைய தேர்தலில் அழகிரியின் பங்கு இல்லாத போதிலும் திமுகவினரை மீறி அரசியல் செய்வது சற்று சிரமம் என்பதை ஒத்துக்கொள்கின்றனர்.


ரம்யா


வனிதா

அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயக்குமார் தன்மகளான பிரியதர்ஷினி, முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ தன் மகள் ரம்யாவையும் களமிறக்க இருக்கிறார்கள். இவர்கள் இருவரும் கோதாவில் இறங்கிருப்பது அதிமுகவில் சலசலப்பை ஏற்படுத்தி வருகின்றது. அதிமுக ஆட்சி இருக்கும் போதே மதுரை மேயர் பதவியை கைப்பற்றியது திமுக. ஆளும்கட்சி என்ற அசுரபலத்தோடு, இந்த முறை மதுரையை கைப்பற்ற அமைச்சர்கள் மூர்த்தி, பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் அகியோர் தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகிறார்கள். இவர்களுக்குள் கவுன்சிலர் வேட்பாளர்கள் தேர்வில் மோதல் போக்கு நடைபெற்று வருகிறதாம்.

## செங்கோலை பிடிக்கப் போவது யார்..?



இதனைப் பயன்படுத்தி திமுகவின் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் பொன். முத்துராமலிங்கமோ எனக்கு எம்.எல்.ஏ பதவிதான் கொடுக்கல! என் மருமகளுக்கு மேயர் வாய்ப்பு கொடுங்கனு தலைமைக்கு காவடி எடுத்திருக்கிறாராம். மதுரை வடக்கு தொகுதி திமுக எம்.எல்.ஏ வான தளபதி, தன் மகளுக்கு சீட் வாங்கி விடுவதில் உறுதியாக இருக்கிறாராம். மேயருக்கு நேரடித்தேர்தல் இல்லை ஆதலால் சிக்கி சின்னாபின்னமாகாமல் பேசாமல் பாஜகவுக்கு விட்டுகொடுத்துவிடாலாம் என்கிற மனநிலையில் எடப்பாடியும், ஓ.பி.எஸ்ம் இருக்கிறார்களாம். அப்படி கூட்டணி அடிப்படையில் பாஜகவுக்கு மேயர் சீட் வழங்கினால், மதுரை மாவட்டத்தலைவராக இருக்கும் டாக்டர். சரவணன் மனைவிக்கு அந்த வாய்ப்பு கிடைக்கும் என்கிறார்கள் அதிமுக நிர்வாகிகள்.

எது எப்படியோ, மீண்டும் மதுரையில் மீனாட்சி ஆட்சி என்பது உறுதியான நிலையில், செங்கோல் யார் கைக்குச் செல்லப்போகிறது என்பதை காலம்தான் தீர்மானிக்கும்.

● க.சண்முகவடிவேல்

# மதம்மாறச் சொன்னதால் மாணவி தற்கொலை செய்துகொண்டாரா..?

"அரியலூர் மாவட்டம், வடுகபாளையம் கீழத்தெருவைச் சேர்ந்தவர் முருகானந்தம். இவரின் முதல் மனைவி கனிமொழி, எட்டு ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். இந்தத் தம்பதியருக்கு 17 வயதில் ஒரு மகள். முதல் மனைவி இறந்த பின்பு, முருகானந்தம் சரண்யா என்பவரை இரண்டாவதாகத் திருமணம் செய்துகொண்டார். இதைத் தொடர்ந்து, முருகானந்தம் தன் மகளை தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி அருகே மைக்கேல்பட்டி தூயஇருதய மேல்நிலைபள்ளியில் 8ம் வகுப்பில் சேர்த்து விட்டார். அவர், பள்ளி வளாகத்திலுள்ள செயின்ட் மைக்கேல் மகளிர் விடுதியில் தங்கிப் படித்துவந்தார்.



போராட்டத்தில் ஈடுபட்ட இந்து அமைப்பினர்...

ராகேல்மேரி என்ற சகாய மேரி, விடுதி வார்டனாக பணிபுரிந்துவருகிறார். முருகானந்தத்தின் மகள் தற்போது 12ம் வகுப்பு படித்து வந்தநிலையில், வார்டன் சகாய மேரி அந்த மாணவியை கிறிஸ்துவ மதத்துக்கு மதம் மாறச் சொன்னதாகவும், அதற்கு அந்த மாணவி மறுத்துவிட்டதால் அவரைக் கொடுமைப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இதனால் மன உளைச்சல் அடைந்த மாணவி, கடந்த 9ம் தேதி விடுதியிலேயே விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றதாகக் கூறப்படுகிறது. அதைத் தொடர்ந்து, அவருக்கு வயிற்றுவலி அதிகமாகியிருக்கிறது. அதனால், அவர் வடுகம்பாளையத்தில் உள்ள அவரது பெற்றோர் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார். இந்த நிலையில், கடந்த 15ம் தேதி தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி பலியானார்.

இந்த சம்பவத்தை பாஜகவும், விஸ்வ ஹிந்து பரிஷத்தும் கையில் எடுத்தது. இந்து மதத்தை சேர்ந்த அந்த மாணவியை, கிறிஸ்துவ மதத்துக்கு மாற வற்புறுத்தியதால்தான் அவர் தற்கொலைக்கு முயன்றதாக விஸ்வ ஹிந்து பரிஷத் மற்றும் பா.ஜ.கவினர் சமூக வலைதளங்களில் பதிவிட்டுவந்தனர்.

இது தொடர்பாக தற்கொலை செய்துகொண்ட மாணவியும், 'ஹாஸ்டல் வார்டன் கடந்த இரண்டு வருடங்களாகவே என்னை மதம் மாற அழுத்தம் கொடுத்து வந்தார். அதற்கு நான் மறுத்ததால், கொடுமைக்கு ஆளானேன்' என வீடியோவில் பேசியிருந்தார்.

அந்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவி பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

இந்த விவகாரத்தில், அறையைச் சுத்தம் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். அதனால் மாணவியால் படிக்க முடியாமல் தற்கொலை செய்து கொள்ள முயன்றார் என போலீஸார் வழக்கு பதிவு செய்தனர். ஆனால் மாணவியின் உறவினர்கள், "மதம் மாறச் சொன்னதால்தான் மாணவி தற்கொலை செய்துகொண்டதாக வழக்கு பதிவு செய்ய வேண்டும். அப்போதுதான் உடலை வாங்குவோம்" என மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முன்பு போராட்டத்தில் குதித்தனர். இது தமிழகம் முழுவதும் எதிரொலித்தது. சென்னையில் பாஜகவை சேர்ந்த குஷ்பு உள்பட பலரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் தமிழகம் முழுவதும் ஒருவித பதற்றமான சூழல் உருவானது.

இந்த சம்பவம் குறித்து மாணவியின் குடும்பத்தினரிடம் விசாரித்தோம். "அந்தப் பிள்ளை நல்லா படிக்குற பொண்ணுதாங்க, பத்தாம் வகுப்புல 487 மார்க் பெற்று பள்ளியில முதலிடம் வந்துச்சு. 12ம் வகுப்புலயும் ஸ்டேட் ஃப்ஸ்ட் வரனும்ன்னுதான் கஷ்டப்பட்டு படிச்சு வந்தா.

ஸ்கூல்ல என் பொண்ணுகிட்டதான் எல்லா வேலையும் வாங்கியிருக்காங்க. ஊரடங்கு நேரத்துலகூட வீட்டுக்கு அவளை அனுப்பல. பலமுறை வார்டன் சகாயமேரிகிட்ட கேட்டும், அனுப்ப மறுத்துட்டாங்க. கிறிஸ்துமஸ் லீவுக்குக்கூட பிள்ளைய அனுப்பலை. ஸ்கூல்ல பிரச்னை பண்ண வேண்டாம்னு விட்டுட்டோம். அவள அடிக்கடி ஹாஸ்டல் வார்டன் கிறிஸ்துவ மதத்துக்கு மாறச் சொல்லி வந்ததா எம்பொண்ணு சொன்னா. மதம் மாறிக்க ஒப்புக்கொள்ளாமல் படிப்பில் கவனம் செலுத்தி வந்தா. இதனால அந்த வார்டன் எம்பொண்ணை கழிப்பறை உள்ளிட்டவற்றைச் சுத்தம் செய்யச் சொல்லி கொடுமைப்படுத்தியிருக்கிறாங்க.

'எனக்கு வாழவே பிடிக்கலை. நான் சாவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறேன்' என தன்னுடைய நோட்டில் எழுதி வைச்சு தற்கொலை செய்துகிட்டா. அவளுக்கு வயித்து வலின்னு சொல்லி எங்கள வரச்சொல்லி அனுப்பிச்சுட்டாங்க. தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரிக்கு அழைச்சுட்டுப் போனப்பதான் அங்கே சோதனை செஞ்ச டாக்டர்கள்தான், அவ விஷம் குடிச்ச விஷயத்தையே எங்ககிட்ட சொன்னாங்க. ஸ்கூல்ல கமுக்கமா இருந்துக் கிட்டாங்க.

இதற்குக் காரணம் அந்த பள்ளியும், ஹாஸ்டல் நிர்வாகமும்தான். வார்டன் சகாய மேரி தன்னுடைய பணிகள் அனைத்தையும் எம்பொண்ணை செய்ய வைத்துள்ளார். பன்னிரண்டாம் வகுப்பில் நல்ல மதிப்பெண் எடுத்தால், நல்ல நிலைக்குப் போகலாம் என நினைச்சவள, வார்டன், அளவுக்கு

இறந்த மாணவியின் தந்தை – சித்தி



**– கல்விக் நிலையங்களில் நிகழும் அத்துமீறல்களுக்கு முற்றுப்புள்ளி எப்போது?**

அதிகமாக வேலை வாங்கி வந்ததால் அவளால் படிக்க முடியவில்லை. மேலும், தொடர்ச்சியாக மதம் மாறவும் அழுத்தம் கொடுத்து, 'மதம் மாறினால் உனக்கு எல்லா உதவியும் கிடைக்கும்... நீ படிச்சு பெரிய ஆளா வருவ' எனக் கூறி அடிக்கடி சிரமத்த கொடுத்திருக்காங்க ஸ்கூல்ல. இதனால் ஏற்பட்ட மன உளைச்சலில் விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றவ, இப்போ எங்களை விட்டு விட்டு போய்விட்டா. இதற்குச் சரியான நீதி கிடைக்க வேண்டும். அப்போதுதான் அவளோட ஆத்மா சாந்தியடையும்" என்றனர்.



இந்தச் சம்பவம் தொடர்பாக பள்ளித் தரப்பில் விசாரித்தோம். "அந்த மாணவி, 'என் சித்தி என்னைக் கொடுமைப்படுத்துறாங்க, அப்பாவும் என்னை கண்டுக்குறதில்ல!' எனக் கூறிக்கொண்டே இருப்பார். அதனால் மன உளைச்சலில் இருந்தார். விடுமுறை விட்டால்கூட வீட்டுக்குச் செல்லாமல் ஹாஸ்டலிலேயே இருப்பார். சிஸ்டர் சகாய மேரிக்கு 62 வயதாகிறது.

தன்னுடைய சொந்தக் குழந்தைபோலவே அந்த மாணவியை கவனித்து, வளர்த்துவந்தார். அவருக்குவேண்டிய அனைத்தையும் செய்து கொடுப்பார். எங்கே போனாலும் கூடவே அழைச்சுக்கிட்டு போவார். கடந்த கிறிஸ்மஸ் பண்டிகையின்போதுகூட புது டிரெஸ் எடுத்துக் கொடுத்தார். பீரோ சாவியைக்கூட அந்த மாணவியிடம்தான் கொடுத்து வைத்திருப்பார். இருவரும் நல்ல புரிதலுடன் இருந்து வந்தனர். அப்பா, அம்மா பாசம் கிடைக்கவில்லை என்கிற ஏக்கம் அந்த மாணவிக்கு இருந்து வந்தது. "பன்னிரண்டாம் வகுப்பு முடித்த பிறகு எங்க போய் தங்குவேன்?' என்று கேட்டுக்கொண்டே இருப்பாள். இந்தச் சூழலில், விஷம் குடித்திருக்கிறார். அதைக்கூட அவர் யாரிடமும் சொல்லவில்லை. வயிற்றுவலி மற்றும் வாந்தி எடுத்துக்கொண்டே இருந்ததால் பெற்றோரிடம் அனுப்பி வைத்தோம். அவர்களிடத்திலும் அவர் விஷம் குடித்ததைச் சொல்லவில்லை.

உடல்நிலை முடியாமல் போனதைத் தொடர்ந்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். டாக்டர்கள்தான் விஷம் குடித்ததைக் கண்டுபிடித்துள்ளனர். ஆனால், 'வார்டன் அறையைச் சுத்தம் செய்தல் உள்ளிட்ட வேலைகளைச் செய்யச் சொன்னார். அதனால் என்னால் படிக்க முடியவில்லை' என போலீஸில் வாக்கு மூலம் கொடுத்துள்ளார். அதன் அடிப்படையிலேயே வழக்கும் பதிவும் செய்யப்பட்டு, வார்டன் சகாய மேரியும் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

மதம் மாறச் சொல்லி வற்புறுத்தியதால் தற்கொலை செய்துகொண்டார் என்பது தவறான தகவல். அவர் சித்தி சரண்யா உண்மைக்கு மாறாகப் பேசிவருகிறார். சுய ஆதாயத்துக்காக தவறான தகவல்களைப் பரப்பி சிலர் உள் நோக்கத்துடன் இதில் செயல்பட்டுவருகின்றனர். விசாரணையில் உண்மை தெரியவரும்" என்றனர்.

மாணவி தற்கொலைக்கு முயன்று மருத்துவமனையில் இருந்தபோது அவரை சந்தித்து வீடியோ பதிவிட்ட பா.ஜ.கவை சேர்ந்த முத்துவேலிடம் பேசியபோது, "மாணவியின் இறப்பை வைத்து அரசியல் செய்ய வேண்டும் என்கிற எண்ணம் எங்களுக்கு இல்லை. அந்தக் குடும்பத்தினரை இயக்கவேண்டிய அவசியம் எங்களுக்கு என்ன இருக்கிறது?

தமிழகத்தில் இந்துக்கள் திட்டமிட்டு மத மாற்றம் செய்படுகிறார்கள் என்பதைப் பல ஆண்டுகளாகச் சொல்லி வருகிறோம். பல கிறிஸ்தவப் பள்ளிகளில் திருநீறு, பொட்டு,

பூ வைக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. அந்த மாணவியே, மரண வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். ஆனால், அந்த மாணவி பேசியது பொய் என மறுக்கிறது காவல்துறை. அதே பள்ளியில் படித்த இன்னொரு மாணவியும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். தற்போது இறந்த மாணவியை, பள்ளி நிர்வாகம் பல தேவாலயங்களுக்கு அழைத்துச் சென்றிருக்கிறது. அதன் நோக்கம் என்ன



முத்துவேல்

என்பதுதான் எங்கள் கேள்வி. யாருக்கோ சாதகமாகச் செயல்பட்டு இவ்வழக்கை திசைதிருப்பப் பார்க்கிறது காவல்துறை. இவ்வழக்கில் சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்யும் வரையிலும் நாங்கள் விட மாட்டோம்" என்றார்.



ரவளி பரியா

தஞ்சாவூர் மாவட்ட எஸ்.பி ரவளி பிரியா, "இது சென்சேஷனல் பிரச்னை என்பதால், தீவிரமாக விசாரிக்கிறோம். மாணவியிடம் போலீஸார் நடத்திய விசாரணையிலும், மாணவி மாஜிஸ்ட்ரேட்டிடம் அளித்த வாக்குமூலத்திலும் மத மாற்றம் தொடர்பாக எந்தத் தகவலும் இல்லை. அதுபோலவே அவரது பெற்றோரும் சொல்லவில்லை. அதனால், முதல் தகவல் அறிக்கையில் மத மாற்றம் குறித்துக் குறிப்பிடவில்லை. மத மாற்றம் தொடர்பாக அந்த மாணவியிடம் ஒரு நபர் பேசும் வீடியோ, மாஜிஸ்ட்ரேட்டிடம் அளித்த வாக்குமூலம் கிடையாது. அந்த வீடியோ, சமூக வலைதளங்களில் பரப்பப்படுகிறது, இது சிறார் சட்டப்படி குற்றம். வீடியோ எடுத்தவர்மீது வழக்கு பதிவு செய்திருக்கிறோம். இப்போது மாணவியின் பெற்றோர் அளித்த மற்றொரு புகாரில், மத மாற்றம் தொடர்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது அதன் அடிப்படையில் விசாரணை நடத்தி வருகிறோம்" என்றார்.

வசதி படைத்த மாணவர்கள் பயிலும் ஒரு தனியார் பள்ளியில் இதுபோன்ற அத்துமீறல்கள் நடந்தது தெரிய வந்தால் அந்தப்பள்ளிக்கூடத்தின் முன்பு பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடக்கும். தனியார் பள்ளியை பல்வேறு அமைப்புகள் முற்றுகையிடுவர்.

ஆனால், ஏழை எளிய கீழ்மத்திய வர்க்க குடும்பங்களின் பிள்ளைகள் பயிலும் அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களைத் தங்களது வேலைக்காரர்கள் போல நடத்தும் மனப்போக்கு சில ஆசிரியர்களிடம் அதிகரித்து வருகிறது என்பதற்கு பல்வேறு சம்பவங்கள் சாட்சிகளாக இருக்கின்றன.

பெற்றோர்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவது கல்வி கற்கத்தான். மத அறிவைப் பெறுவதற்கோ, வீட்டு வேலைகளைக் கற்றுக்கொள்வதற்கோ அல்ல. இப்படி பல்வேறு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தெரிந்தும், தெரியாமலும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மாணவர்கள் மீதான தாக்குதலுக்கு எப்போது முற்றுப்புள்ளி என்பது கேள்விக்குறியாகத்தான் இருக்கு? பள்ளிக்கூடங்களை சரிபார்க்க வேண்டிய கல்வித்துறை உயரதிகாரிகள், பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்களது கடமையில் இருந்து தவறியதன் விளைவுகளே நாம் அன்றாடம் அதிர்ச்சியுடன் எதிர்கொள்ளும் இதுபோன்ற துர்சம்பவங்களுக்கான காரணிகள் எனலாம்.

நன்றாக படித்து வந்த பள்ளி மாணவி ஒருவர் தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார் என்றால் இதற்கு காரணமானவர்கள் கட்டாயம் தண்டிக்கப்படுவதோடு பிற சம்பவங்கள் நிகழாமல் இருப்பதற்கும் அரசு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். ■

● ஜி.ஆர்.கண்ணன்

# மதுரையில் 'கிழியும்' போஸ்டர் யுத்தம்!

## – பாஜகவில் டாக்டர் சரவணன் அட்ராசிட்டி



டாக்டர் சரவணன்

**எஜமான் திரைப்பட நெப்போலியன் போல கல்யாண வீடாக இருந்தாலும் சரி, எழவு வீடாக இருந்தாலும் சரி மாலை மரியாதை தனக்கு மட்டுமே கிடைக்கணும்னு சொல்வார். அந்த கதைபோல மதுரை மாநகர் பாஜக மாவட்ட தலைவர் சரவணன் எந்த கட்சிக்கு சென்றாலும் தன்னை முன்னிலைப்படுத்தியே அரசியல் நடக்கணும்னு செயல்படுவதாக மூத்த நிர்வாகிகள் தகவல் தெரிவிக்கின்றனர்.**

திருப்பரங்குன்றம் தொகுதி திமுக எம்எல்ஏவாக இருந்தவர் டாக்டர் சரவணன். சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிட அக்கட்சியில் வாய்ப்பு கிடைக்காததால் பாஜகவில் சேர்ந்தார். மதுரை வடக்குத் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியும் அடைந்தார். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு மதுரை மாநகர் மாவட்ட பாஜக தலைவராக சரவணன் நியமிக்கப்பட்டார். தலைவர் பதவி பொறுப்பேற்று பாஜக அலுவலக திறப்பை திராவிட கட்சியில் இருந்த அனுபவத்தில் மதுரையையே சுற்றி வந்து பெரும் அலப்பறையை கூட்டியது பாஜகவினர் மத்தியில் மட்டுமல்லாது மதுரை மக்களிடையேயும் முகம் சுழிக்க வைத்தது. தொடர்ந்து தனக்கு ஆதரவான ஒரு வட்டத்தை வைத்து மதுரை முழுவதும் போஸ்டர் ஒட்ட வைத்தார்.

மேலும் தற்போது மதுரை மாநகர் பாஜகவுக்குப் புதிய நிர்வாகிகளாக தனக்கு ஆதரவான கட்சியினரை சரவணன் நியமனம் செய்து வருகிறார். அவர் மாவட்ட தலைவராக பொறுப்பேற்றதில் இருந்து கட்சிக்கும், கட்சியின் பல்வேறு அணிகளுக்கும் 160 க்கும் மேற்பட்ட புதிய நிர்வாகிகளை அவர் நியமித்துள்ளார். புதிய நிர்வாகிகள் ஒவ்வொரு வரையும் டாக்டர் சரவணன் தனியாக சந்தித்து கட்டாயம் போஸ்டர் ஒட்ட வேண்டும் என கண்டிசன் வேற போட்டது கட்சியினர் மத்தியில் கூடுதல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. மேலும் ஏற்கனவே மதுரை மாநகர் பாஜகவில் இருந்த பழைய நிர்வாகிகள் அனைவரையும் கூண்டோடு நீக்கி விட்டு தனக்கு சாதகமான ஆதரவாளர்களுக்கு பதவி கொடுத்தது அதிருப்தியை ஏற்படுத்தியதால் இது குறித்து கட்சி தலைமைக்கு புகார் அனுப்பியும் டாக்டர் சரவணன் தன்னுடைய செல்வாக்கால் நமத்து போக வைத்திருக்கிறார்.

ஏற்கனவே மதுரை மாவட்ட பாஜக மூன்றாக பிரிந்திருக்கும் நிலையில் புதிய வரவான டாக்டர் சரவணனின் போஸ்டர் அரசியலை எதிர்க்க முடியாமல் மற்ற மூவரும் முடங்கி விட்டனர் என்பதுதான் தற்போதைய நிலைமை! ■

● ஜி.ஆர்.கண்ணன்

# பாய்ந்த அ.தி.மு.க... பதுங்கிய நயினார்..!

**‘சட்டமன்றத்தில் ஆண்மையோடு பேச அதிமுகவில் ஒருவர் கூட இல்லை’யென உண்ணாவிரத போராட்டத்தில் பாஜக சட்டமன்ற தலைவர் நயினார் நாகேந்திரன் பேசியதும், சற்றும் தாமதிக்காமல் அதிமுக ஐடி விங் தரப்பில், ‘அதிமுக தோல்மீது தொற்றிக்கொண்டு பெற்ற எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து விட்டு மீண்டும் வெற்றி பெற்று தங்கள் ஆண்மையை நிரூபிக்கலாமே’ என பதிலடி கொடுத்தனர்.**

தேவையில்லாத சர்ச்சையில் சிக்கிவிடக்கூடாதென சுதாரித்த நயினார் ‘நான் பேசியது தவறுதலாக புரிந்து கொள்ள பட்டுள்ளது. அதில் எந்த உள்நோக்கமும் இல்லை’யென பதுங்கிய விவகாரம் அதிமுக பாஜக தொடருமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

தஞ்சாவூர் பள்ளி மாணவி லாவண்யா தற்கொலை விவகாரம் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தஞ்சாவூரில் பள்ளி ஒன்றின் ஹாஸ்டலில் தங்கி படித்து வந்த பிளஸ் 2 மாணவி லாவண்யா பூச்சி மருந்தை குடித்து தற்கொலை செய்து கொண்டார். இந்த மாணவியின் தற்கொலையில் பல்வேறு மர்மங்கள் நிலவி வரும் நிலையில் ஒரு தரப்பில் ஹாஸ்டல் வார்டன் கொடுத்த டார்ச்சரால் தற்கொலை செய்ததாக தெரிவித்த நிலையில் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தனது டுவிட்டர் பக்கத்தில் பள்ளி மாணவி தற்கொலைக்கு கட்டாய மதமாற்றம் தான் என் மாணவி பேசியதாக வீடியோ ஒன்றை வெளியிட்டு அடுத்த பரப்பரப்பை கிள்ம்பினார்.

தமிழக பாஜக மாணவி லாவண்யா

## கூட்டணியில் விரிசலா..?



தற்கொலை விவகாரத்தை கையிலெடுத்து தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. இதன் கடந்த புதன்கிழமை தமிழக பாஜக சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் மாணவி லாவண்யாவிற்கு நீதி வேண்டி உண்ணாவிரத போராட்டத்தை நடத்தியது. கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஆளும் திமுக அரசின் இந்து விரோத போக்கு, கட்டாய மதமாற்ற சட்டத்தை அமுல்படுத்த கோரியும், தற்கொலை செய்து கொண்ட மாணவி லாவண்யா குடும்பத்திற்கு தமிழக அரசு இழப்பீடு வழங்க வேண்டுமென

பேசியதோடு தமிழக பாஜக சார்பில் மாணவி லாவண்யா குடும்பத்திற்கு ரூ.10 லட்சம் வழங்குவதாக பேசினர்.

ஆனால் தமிழக பாஜக சட்டமன்ற தலைவர் நயினார் நாகேந்திரன் எம்.எல்.ஏ. பேசும் போது,"அதிமுக எதிர்க்கட்சியாக சட்டமன்றத்தில் சரியாக செயல்படவில்லை எனவும் சட்டமன்றத்தில் ஆண்மையுடன் திமுகவை எதிர்த்து பேச அதிமுகவில் ஒருவரும் இல்லை" என பேசிய நயினார் நாகேந்திரன், அதிமுக மக்கள் பிரச்சினையை சட்டமன்றத்தில் எப்போதுமே பேசுவதில்லை எனவும், எதிர்க்கட்சியாக இல்லாவிட்டாலும் பாஜகவின் அண்ணாமலை மட்டுமே துணிச்சலோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார், எதிர்க்கட்சியாக இல்லை என்றாலும் ஊடகங்களுக்கு தைரியமாக பேட்டி கொடுப்பவர் அண்ணாமலை மட்டுமே என நயினார் நாகேந்திரன் பேசியது அதிமுகவினர் மத்தியில் பெரும் சலசலப்பை உண்டாக்கியது.





நயினார் நாகேந்திரன் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவினர் சமூக வலைத்தளங்களில் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதன் உச்சகட்டமாக அதிமுக ஐடி விங் மதுரை மண்டல செயலாளர் ராஜ் சத்யன் தனது டுவிட்டரில், நீங்கள் வேண்டுமானால் அதிமுக தோள் மேல் தொத்திக் கொண்டு பெற்ற சட்டமன்ற பதவியை ராஜினாமா செய்து விட்டு, தாங்களாக மீண்டும் வெற்றி பெற்று தங்கள் ஆண்மையை நிருபியுங்களேன்...? ஆண்மை என்பது சொல் அல்ல செயல்..! என பதிவிட்டது சமூக வலைத்தளங்களில் அதிக அளவில் டிரெண்டானது.

தொடர்ந்து அனைத்து அதிமுக ஐடி விங் நிர்வாகிகள் எதிர்ப்பு தெரிவித்ததோடு நயினார் நாகேந்திரன் அதிமுகவை தரக்குறைவாக பேசியதற்கு கொளத்தூர் காவல்நிலையத்தில் புகாரும் அதிமுக சார்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய வகையில் பேசியது குறித்து நயினார் நாகேந்திரனை தொடர்பு கொண்டதற்கு டுவிட்டரில் தெரிவித்த வள்ளுவர் கோட்டத்தின் போராட்டத்தின் போது, "அஇஅதிமுக பற்றிய என்னுடைய கருத்துக்கள் தவறுதலாக புரிந்துகொள்ள பட்டுள்ளது .நான் கூறிய கருத்துக்கு எந்த விதமான உள்நோக்கமும் இல்லை, போராட்டத்தின் மூலம் நீதி கிடைக்க வேண்டும் என்பதே எங்கள் ஒரே எண்ணம்'' என்பதுதான் எனது கருத்தென தெரிவித்தார்.

அதிமுகவின் கடும் எதிர்ப்பினால் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, நயினார் நாகேந்திரன் பேசிய போது தவறுதலாக வார்த்தை வந்து விட்டது. அவரது பேச்சுக்கும் தமிழக பாஜகவிற்கும் சம்பந்தமில்லை. இது குறித்து அதிமுக தலைமையிடம் விளக்கமாக பேசிவிட்டேன், தமிழகத்தில் அதிமுக எதிர்கட்சியாக சிறப்பாக தான் செயல்பட்டு வருகிறது. அதேபோல் அதிமுக பாஜக கூட்டணியில் எந்த சிக்கலும் இல்லையென அளித்த பேட்டியின் மூலம் நயினார் நாகேந்திரன் விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

நயினார் நாகேந்திரன் பேச்சுக்கு அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவின் மதுரை மண்டல செயலாளர் ராஜ் சத்யன் , அதிமுக கூட்டணியால் பெற்ற எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்து விட்டு மீண்டும் வெற்றி பெற்று தங்கள் ஆண்மையை நிரூபிக்கலாமே என எதிர்ப்பு தெரிவித்ததோடு ஒட்டுமொத்த அதிமுக ஐடி விங் நிர்வாகிகளும் சமூக வலைத்தளங்களில் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அதிமுகவின் எதிர்ப்பு குறித்து மதுரை மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவின் துணைத் தலைவர் கௌரி சங்கரை நாம் தொடர்பு கொண்டு பேசினோம். "நயினார்



நாகேந்திரனுக்கு எம்.எல்.ஏ. மற்றும் அமைச்சர் அடையாளம் கொடுத்தது அதிமுக தான். தற்போது பாஜகவில் இணைந்த பிறகும் நெல்லை தொகுதியின் எம்.எல்.ஏ. என்ற அடையாளத்தை கொடுத்ததும் அதிமுக தான். அதிமுக என்ற கட்சி இல்லைனா நயினார் நாகேந்திரன் என்ற நபர் வெளியுலகிற்கு தெரிய வாய்ப்பே இல்லை. ஏற்றிவிட்ட ஏணியான அதிமுகவை தள்ளிவிட்டு எக்காலத்திலும் நயினார் நாகேந்திரன் அரசியல் பண்ண முடியாது.

அதிமுக கூட்டணியில் இருந்து கொண்டு எல்லாத்தையும் அனுப்பவித்து விட்டு எங்களை தரக்குறைவாக பேசுவதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். கூட்டணி தர்மத்தை பாஜகவினர் மீறும் போது நாங்கள் மீறுவதும் சரிதான். ஆண்மை என்ற வார்த்தையை பாஜக மட்டுமல்ல எந்த கட்சியினரும் பயன்படுத்த கூடாது என்பதற்காக தான் அதிமுகவால் ஜெயித்த எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து விட்டு ஆண்மையோடு அதே தொகுதியில் எம்.எல்.ஏ ஆகி காட்டுங்கள் என அதிமுக ஐடி விங் சார்பில் கடுமையான எதிர்ப்பினை சமூக வலைத்தளங்களில் தெரிவித்தோம்.

அதிமுகவின் கடுமையான எதிர்ப்பினை பார்த்து பயந்து போன நயினார் நாகேந்திரன் நான் பேசியது தவறாக புரிந்து கொள்ள பட்டுள்ளது. அதிமுக குறித்து பேசியது தவறுதலாக பரப்பபட்டுள்ளது என வழக்கமாக நழுவியிருக்கிறார். நயினார் நாகேந்திரனுக்கு அதிமுக ஐடி விங் கொடுத்த எதிரிப்பை பார்த்து இனியும் அதிமுக பற்றியோ , கழக தலைமை பற்றியோ தரக்குறைவாக பேசும் எந்த கட்சியினராக இருந்தாலும் அதிமுக ஐடி விங் தக்க பதிலடி கொடுக்குமென பயங்கொள்ள வேண்டும்" என்றார்.

உள்ளாட்சித் தேர்தல் தேதி எப்போது வேண்டுமானாலும் வெளியாகலாம் என்ற நிலையில், இந்த மோதல் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் விரிசலை ஏற்படுத்தியிருக்கிறது! ■


வல்லமை தாராயோ இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே...

தமிழக அரசியல்

பதிப்பாளர் - ஆசிரியர்
JSK.சதீஷ்குமார்

இணை ஆசிரியர்
பி.ரெங்கநாதன்

தலைமை நிருபர்கள்
எம்.ஆர்.ராஜா
பி.சுபாஷ் பாபு
கே.ஆர்.உதயகுமார்
ஆர்.ராஜா மகேஷ்

முதன்மை நிருபர்கள்
கிஷோர்
ஜவஹர்
த.இக்னேஷியஸ்
க.சண்முக வடிவேல்
பி.எம்.கணேஷ்
ம.மு.கண்ணன்

நிருபர்கள்
எம்.நமச்சிவாயம்
பி.சிவமுருகன்
மதுரகவி

வடிவமைப்பாளர்
த.கோபாலகிருஷ்ணன்

சட்ட ஆலோசகர்
A.M.ரவீந்திரநாத் ஜெயபால் M.LM., B.L.

விற்பனைப் பிரிவு
சசி

சந்தா தொடர்பான விவரங்களை அறிய
போன்: 044 - 43511883
tamilagaarasiyalcirculation@gmail.com

எண்: 47, கிரியப்பா ரோடு,
தி.நகர், சென்னை-600017
போன்: 044-43511883
e-mail: newtamilagaarasiyal@gmail.com



கட்டுரையாளர்களின் கருத்துக்கள்
அவர்களின் சொந்தக் கருத்துக்களே.

JSK PRIME MEDIA

பி.ரெங்கநாதன்



## நகர்ப்புற தேர்தல்...

# முதல்வரின் 'திரிசூல' வியூகம்!

அரசியல் கட்சியினரைத் தாண்டி அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் தேதியினை, மாநில தேர்தல் ஆணையம் கடந்த 26-ந்தேதி மாலை 6.30 மணிக்கு வெளியிட்டது.

இது தொடர்பாக மாநில தேர்தல் ஆணையர் பழனிக்குமார், "21 மாநகராட்சிகளில் உள்ள 1,064 வார்டுகள், 138 நகராட்சிகளில் உள்ள 3,468 வார்டுகள், 490 பேரூராட்சிகளில் உள்ள 8,288 வார்டுகளுக்கும் ஒரே கட்டமாக உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படவுள்ளது.தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் வரும் 28ம் தேதி தொடங்குகிறது. பிப்ரவரி 4ம் தேதி வரை மனு தாக்கல் செய்யலாம்.

வேட்பு மனுக்கள் பிப்ரவரி 5ம்தேதி பரிசீலனை செய்யப்படுகின்றன. வேட்பு மனுக்களை திரும்ப பெற கடைசி நாள் பிப்ரவரி 7ம் தேதி ஆகும். 19ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும். பிப்ரவரி 22ம் தேதி வாக்குகள் எண்ணப்படுகின்றன" என்று அறிவித்திருக்கிறார்.

இந்த நிலையில்தான் ஆளும் தி.மு.க. ஏற்கனவே நேர்காணல்களை நடத்தி முடித்த நிலையில் தேர்தல் களத்தில் ஜரூராக இறங்கி வேலைபார்த்து வருகிறது. நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றாலும், கொங்கு மண்டலம் மற்றும் வட மாவட்டங்களில் சொல்லிக்கொள்ளும் படியாக வெற்றி பெறவில்லை. இதனால் முதல்வர் மு.க.ஸ்டாலின் அதிருப்தியில் இருந்தார். கொங்கு மண்டலத்தில் தி.மு.க. தோல்வியடைந்த நிலையிலும், அங்கு ஏராளமான நலத்திட்ட உதவிகளை வழங்கியிருக்கிறார் முதல்வர்.

வருகிற நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் கொங்கு மண்டலம் மற்றும் வடமாவட்டங்களில் தி.மு.க. வெற்றி பெறுவதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் 'திரிசூல' வியூகத்தை வகுத்திருப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரத்தில் உள்ளவர்கள் கிசுகிசுக்கிறார்கள்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் அப்படி என்ன முதல்வர் 'திரிசூல' வியூகத்தை வகுத்திருக்கிறார் என்று, அவருக்கு நெருக்கமான வட்டாரத்தில் உள்ளவர்களிடம் பேசினோம்.

''நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் கொங்கு மண்டலமான கோவையில் ஒரு தொகுதியில் கூட தி.மு.க. வெற்றி பெறவில்லை. சேலத்தில் ஒரு தொகுதியில் பனமரத்துப்பட்டி ராஜேந்திரன் வெற்றி பெற்றாலும், அவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படவில்லை. அதே போல், தர்மபுரி மாவட்டத்திலும் தி.மு.க. சொல்லிக்கொள்ளும் படியாக வெற்றி பெறவில்லை.

இந்த நிலையில்தான், கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக, கொங்கு மண்டலத்தில் உள்ள கரூர் மாவட்டத்தில் உள்ள 4 தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றி பெற்றது. தேர்தலுக்கு முன்பே நான்கு தொகுதிகளிலும் வெற்றி பெறும் என்று செந்தில் பாலாஜி கூறியிருந்தார். அவர் சொன்னது போலவே, பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, கடந்த சட்டமன்றத் தேர்தலில் பணத்தை வாரியிறைத்த முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் போன்ற முக்கியத் தலைகளை தோற்கடித்து தி.மு.க. வேட்பாளர்களை வெற்றி பெற வைத்தார் செந்தில்பாலாஜி.

தேர்தலுக்கு முன்பு அவர் சொன்னபடியே செய்துகாட்டியதால், அவருக்கு அமைச்சரவையில் மூத்த


கே.என்.நேரு


எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்


செந்தில்பாலாஜி



வீரபாண்டி ஆறுமுகம்



பனமரத்துப்பட்டி ராஜேந்திரன்



பழனியப்பன்

அமைச்சர்கள் சிலர் எதிர்பார்த்திருந்த முக்கியத்துறைகளை கைமாறாக கொடுத்தார் முதல்வர் ஸ்டாலின். ஆனால், கோவையில் உள்ள பத்து தொகுதிகளிலும் அ.தி.மு.க வெற்றி பெற்று, 'கோவை அ.தி.மு.க.வின் கோட்டை' என்பதை நிரூபித்தது.

இதைவிடக் கொடுமை, பொள்ளாச்சியில் பாலியல் கொடுமை அரங்கேறியது. அங்கு தி.மு.க.விற்காக கனிமொழி கடுமையான பிரச்சாரம் மேற்கொண்டார். ஆனாலும் பலன் கிடைக்கவில்லை அ.தி.மு.க.வே வென்றது.

இந்த நிலையில்தான், வரும் நகர்ப்புற தேர்தலில் கோவை மாநகராட்சியை தி.மு.க. கைப்பற்றியாக வேண்டும் என்ற நோக்கில், கோவைக்கு 'பொறுப்பு அமைச்சராக' தனது நம்பிக்கைகுரியவரான செந்தில் பாலாஜியை நியமித்தார் ஸ்டாலின். செந்தில்பாலாஜியும், கோவை, கரூர், சென்னை என வட்டமடித்தபடியே இருந்தார். கோவையில் தாலிக்கு தங்கம் உள்ளிட்ட ஏராளமான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

ஆனாலும், கோவை மாவட்டத்தில் உள்ள உட்கட்சிப் பூசலை தி.மு.க. தலைமைக்கு எடுத்துக் கூறியிருக்கிறார். இங்கு இதே நிலை நீடித்தால், தி.மு.க. 50 சதவீதம்தான் வெற்றி பெற முடியும் என்று அவர் சொன்னதாக ஒரு தகவல் உண்டு. எனவே, கோவையில் நகர்ப்புற தேர்தலில் வெற்றி ஒன்றே குறிக்கோல் என்ற வகையில் காய்நகர்த்தி வருகிறார் செந்தில்பாலாஜி. அதாவது, யாருக்கு சீட் கொடுத்தால் கட்சியினர் உள்ளடி வேலை பார்ப்பார்களோ, அவர்களுக்கு சீட் கொடுக்க வேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறார். எந்தவொரு உட்கட்சி பூசலிலும் தலையிடாத, நடுநிலையானவர்களுக்கு சீட் கொடுத்து கோவை மாநகராட்சியை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டும் என்று காய் நகர்த்தி வருகிறார்.

அதே போல், சேலம் மாவட்டத்திற்கு 'பொறுப்பு அமைச்சராக' கே.என்.நேருவை நியமித்திருக்கிறார் முதல்வர் ஸ்டாலின். ஏனென்றால் கே.என்.நேருவுக்கும், வீரபாண்டி ஆறுமுகத்தின் குடும்பத்திற்கும் உள்ள நெருக்கம் அரசியலைத்தாண்டி அனைருக்கும் நன்றாகத் தெரியும். வீரபாண்டியார் மறைவிற்குப் பிறகு வீரபாண்டி ராஜா, தனது மனக்குமுறலை கே.என்.நேருவிடம்தான் கொட்டி வந்தார். 'கொஞ்சம் பொறுமையாக இருங்கள்... நான் உங்களுக்கு தலைவரிடம் சொல்லி செய்துகொடுக்கிறேன்' என்று கே.என்.நேருவும் சொல்லிவந்தார். அதற்குள் துரதிர்ஷ்டவசமாக வீரபாண்டி ராஜா இறந்துவிட்டார்.

வீரபாண்டியார் குடும்பத்திற்கும், பனமரத்துப்பட்டி ராஜேந்திரன் குடும்பத்திற்கும் உள்ள உள்கட்சி மோதலால்தான் கடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சேலத்தில் படுதோல்வியடைந்தது. வீரபாண்டியார் இருக்கும்போது சேலம் மாவட்டத்தை தி.மு.க.வின் கோட்டையாக மாற்றிவந்தார். இந்த நிலையில்தான் இரு குடும்பத்திற்கும் பாலமாகவும், தி.மு.க. நிர்வாகிகளின் உண்மையான மனக்குமுறலை அறிந்து நடவடிக்கை எடுப்பதற்கு கே.என்.நேருவை நியமித்தார் ஸ்டாலின். அவரும் திருச்சி, சேலம், சென்னை என பறந்து,



இபிஎஸ் - ஓபிஎஸ்

# விட்டமின்... வில்லங்கம்..!

கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது இருந்த நிலையை தற்போது மாற்றியிருப்பதாகச் சொல்கிறார்கள்!

தர்மபுரி மாவட்டத்திற்கு கடலூர் மாவட்ட அமைச்சரான எம்.ஆர்.கே. பன்னீர் செல்வத்தை 'பொறுப்பு அமைச்சராக' நியமித்திருக்கிறார் முதல்வர் ஸ்டாலின். இவருக்கு தொகுதி புதிதுதான் என்றாலும், சமீபத்தில் செந்தில் பாலாஜியின் மூலமாக, முன்னாள் அமைச்சர் பழனியப்பன் தி.மு.க.வில் இணைந்திருக்கிறார். இவருக்கு தொகுதியில் உள்ள மக்களிடையே நல்ல பரிச்சயம் உண்டு. எங்கெங்கு தி.மு.க. வீக்காக இருக்கிறது என்பதை அறிந்து, அங்கு என்ன செய்ய வேண்டும் என்பதை எம்.ஆர்.கே.பன்னீர்செல்வத்திடம் சொல்லியிருக்கிறார். அவருக்கும் அங்குள்ள குறைகளை நிவர்த்தி செய்து வருகிறார். எனவே, இந்த மூன்று மண்டலங்களையும் தி.மு.க. வசப்படுத்த, மூவர்களை நியமித்து முதல்வர் ஸ்டாலின் 'திரிசூல' வியூகத்தை கையில் எடுத்திருக்கிறார். இதற்கு நல்ல பலன் வரும் நகர்ப்புற தேர்தலில் கிடைக்கும்" என்றார்கள்.

தி.மு.க. முதல்வர் மு.க.ஸ்டாலின் 'திரிசூல' வியூகம் வகுத்து வரும் நிலையில், அ.தி.மு.க.வின் நிலையோ பரிதாபமாக இருக்கிறது. தேர்தலில் நிற்கவே வேட்பாளர்கள் தயக்கம் காட்டி வருவதாக தகவல்கள் வருகிறது.

அ.தி.மு.க.நிர்வாகிகள் எதற்காக தயக்கம் காட்டி வருகிறார்கள் என மூத்த ர.ர.க்கள் சிலரிடம் பேசினோம்.

"கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது, எடப்பாடி பழனிசாமி தரப்பினர் தேர்தல் செலவுகளை பார்த்துக்கொண்டனர். தமிழகம் முழுவதும் முக்கியத்துறைகளை கைவசம் வைத்திருந்த ஐந்து அமைச்சர்கள் விட்டமின்களை இறக்கினார்கள். அப்போது முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியின் கை ஓங்கியிருந்தது. தற்போது, அ.தி.மு.க.வில் அதிகாரங்களை ஓ.பி.எஸ். - இ.பி.எஸ். இருவரும் சரிசமமாக பிரித்துக்கொண்டனர். இதனால், வரும் நகர்ப்புற தேர்தலில் பாதி செலவை ஓ.பி.எஸ். தரப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எடப்பாடி தரப்பினர் சொல்கிறார்களாம். அதிகாரத்தில் மட்டும் சரிசமமாக பங்கு வேண்டும், செலவு என்றால் மட்டும் ஓ.பி.எஸ். பதுங்குகிறார் என்று எடப்பாடி பழனிசாமி தரப்பினர் பாய்ந்திருக்கின்றனர். இப்படி இரு தலைவர்களிடையே உள்ள மோதலால், அ.தி.மு.க. நிர்வாகிகள் தேர்தலில் போட்டியிட தயக்கம் காட்டுகிறார்கள்.

கடந்த பத்து வருடமாக அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தாலும், கட்சி நிர்வாகிகளை அமைச்சர்கள் பத்து பைசா கூட சம்பாதிக்க விடவில்லை. 'நல்லது - கெட்டதும்' செய்துகொடுக்கவில்லை. எல்லாம் வாங்கிக்கொண்டுதான் செய்தார்கள். இப்போது நாங்கள் களத்தில் நிற்பதே பெரிய விஷயம். எங்களை செலவு செய்ய சொன்னால் எப்படி என்று மாவட்டச் செயலாளர்களிடம் கேட்டு வருகிறார்களாம். ஆனால், ஓ.பி.எஸ். தரப்பினரோ, 'பசையுள்ள துறைகளை எல்லாம் கெங்கு மண்டலத்திற்கே கொடுத்தாச்சு... நாங்கள் எப்படி செலவு செய்ய முடியும்' என்கிறார்களாம். இப்படி அ.தி.மு.க.வில் பரிதாப நிலைதான் தற்போதைக்கு இருக்கிறது" என்றனர்!

முதல்வரின் 'திரிசூல' வியூகம் பலிக்குமா... கொங்கு கோட்டையை எடப்பாடியார் தக்க வைத்துக்கொள்வாரா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ■



✉ கோதண்டராமன், வேலூர்.

**தேர்தலுக்கு முன்பாக அரசியல் கட்சிகள் இலவசங்கள் அறிவிப்பதற்கு தடைவிதிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டிருக்கிறதே?**

நல்ல விஷயம்! தேர்தல் சமயத்தில் ஆட்சியைப் பிடிப்பதற்கும், ஆட்சியை தக்க வைத்துக்கொள்வதற்கும் அரசியல் கட்சிகள் இலவசங்களை வாரியிறைத்து வருகிறது. இலவசங்களை அறிவிப்பது அரசியல் கட்சிகள் ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுப்பது போன்ற செயலாகும் என கூறப்பட்டுள்ளது. தேர்தலில் வெற்றி பெற்றால் இதைத் தருவோம், அதைத் தருவோம் என இலவசங்கள் குறித்து அரசியல் கட்சிகள் அள்ளி வீசும் அறிவிப்புகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இப்படி இலவசங்களை அள்ளிவிடும் அரசியல் கட்சிகளின் தேர்தல் சின்னத்தை முடக்கத் தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிட வேண்டும் அல்லது சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியின் பதிவை ரத்து செய்ய வேண்டும் என்று அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி. ரமணா, "இது ஒரு தீவிரமான பிரச்சினை. இது தேர்தல் செலவுகளுக்கு அப்பாற்பட்டது. இதை நம்மால் ஊழல் என்று குறிப்பிட முடியாது என்றாலும் கூட தேர்தல் களத்தில் இது ஒருதலைபட்சமான ஒரு அணுகுமுறையை உருவாக்குகிறது" என்றார். மேலும், இது தொடர்பாக விளக்கம் அளிக்க மத்திய அரசுக்கும் தேர்தல் ஆணையத்திற்கும் நோட்டீஸ் அனுப்பியும் அவர் உத்தரவிட்டார்.

*****

✉ கே.மாதவராஜ், கோவை-45.

**'பிஞ்சு மனதில் நஞ்சை விதைத்தது போல' என்கிறார்களே... அது என்ன...?**

சின்னவயதில் பதிவது பசுமரத்தாணி போல நெஞ்சில் அப்படியே பதிந்துவிடும். ஆனால் இதை பலர் உணர்வது இல்லை! சிறுவயதிலேயே நல்ல பழக்கங்களையும் நல்ல மரியாதைப் பண்புகளையும் கற்றுத்தரவேண்டியது நமது கடமையாகும். பெரியவர்களிடம் மரியாதையாக நடந்து கொள்ள சொல்வது மிக முக்கியமான கடமையாகும். அதற்கு முன்னுதாரணமாக நாமே நடந்து கொள்ள வேண்டும். ஏன் என்றால் நமது குழந்தைகளுக்கு நாமே ரோல் மாடல். நாம் என்ன செய்கிறோமோ அதையே குழந்தைகள் திரும்பச் செய்யும். அதனால்தான், தவறான எண்ணங்களை சிறுவயதில் ஏற்படுத்திவிடக் கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொன்னார்கள். காலப்போக்கில், இந்த வரியை தங்கள் சூழலுக்கேற்ப பயன்படுத்தவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

*****

✉ கே.மாதவராஜ், கோவை-45.

**காங்கிரஸ் செல்வாக்கு சரிந்து கொண்டே போகிறதே..?**

உண்மைதான்... சமீபத்தில் கூட 'காங்கிரஸ் புனரமைக்கப்படவேண்டும்' என்று தேர்தல் வியூக நிபுணர் பிரசாந்த் கிஷோர் சொல்லியிருந்தார். மூத்த நிர்வாகிகளிடையே ஒற்றுமை இல்லை. அம்மையார் சோனியாகாந்திக்கும் அடிக்கடி உடல்நிலை

Published & Printed by **JSK. SATISHKUMAR,** On behalf of JSK Publications from No 47, Giriappa Road, T.Nagar, Chennai - 600017 and printed at JSK Printer, T.Nagar, Chennai - 600 017.
Editor : **JSK. SATISHKUMAR**



✉ ராயப்பன், தி.மலை.

**தமிழகத்தில் அடுத்த மாதம் பள்ளிகள் திறக்கப்படும் என அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்திருக்கிறாரே?**

மகாராஷ்டிராவின் கொரோனாவின் தாக்கம் குறைந்து வருவதால், அங்கு பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்திலும் கொரோனா தாக்கத்தைப் பொறுத்தும், மாணவர்களின் நலன் கருதி அரசாங்கம் முடிவெடுக்க வேண்டும்!

*****

சரியில்லாமல் போவதால், கட்சியின் நிலை அதலபாதாளத்திற்கு சென்றுகொண்டிருக்கிறது.

*****

✉ கருப்பசாமி, சமயபுரம்.

**தலைநகர் டெல்லியில் நிராகரிக்கப்பட்ட ஊர்தி, சென்னை குடியரசு தினவிழாவில் அணிவகுத்திருக்கிறதே?**

டெல்லியில் நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்தை மத்திய அரசு விளக்கிவிட்ட நிலையில், இதனை வைத்து அரசியல் ஆதாயம் தேடுவது, தேவையில்லாத வேலை! தமிழகத்தில் அணிவகுத்த ஊர்திகள் கம்பீரமாக சென்றது காண்போரை வியக்க வைக்கும் விதமாக இருந்தது என்பதையும் மறுக்க முடியாது.

*****

✉ கே.மாதவராஜ், கோவை-45.

**முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் வீட்டில் ரைடு செய்ததை 'ஒன்றுமே எடுத்து செல்லவில்லை' என்கிறார், லஞ்ச ஒழிப்புத் துறை 'நகை, பணம், கைப்பற்றபட்டது என்கிறது' யார் பேச்சை நம்புவது..?**

வழக்கில் முடிவில்தான் 'எல்லாம்' தெரியவரும். ஆனால், இது போன்ற வழக்குகள் சில 'கிணற்றில் போட்ட கல்லாக' இருக்கிறது. யார் எதைச் சொன்னாலும் தமிழக மக்கள் நம்பிவிடுவார்கள். அதனால்தான் இப்படி ஆளாளுக்கு ஒன்றைச் சொல்கிறார்களோ..?

*****

✉ கரும்பாயிரம், சென்னை.

**புதுவை – தெலுங்கானா என இரண்டு மாநிலங்களிலும் தமிழிசை சௌந்தர்ராஜன் தேசிய கொடியேற்றியிருக்கிறாரே..?**

ஒரு கவர்னர் 2 மாநிலங்களில் தேசிய கொடியை ஏற்றி வைத்தது இதுவே முதல் முறை. முதலில் தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் நடந்த குடியரசுதின விழாவில் தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர் தனி விமானம் மூலம் புதுவை வந்த அவர் புதுவை கடற்கரை சாலையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் தேசிய கொடியை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

Registered with the Registrar of Newspapers for India under RNI No. TNTAM/2008/27080
Day of Publishing : Every Friday

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள...

தமிழக அரசியல்
BEYOND THE POLITICS முன்னிலை மின்னிதழ்

www.tamilagaarasiyal.com

தமிழக அரசியல்
வார இதழ்
தினசரி செய்திகள்

ஆலயம்
ஜோதிடம்
ராசி பலன்கள்

சிங்கப் பெண்ணே....(சாதனைப் பெண்கள்)
அழகு குறிப்புகள்
ஆடை, ஆபரணம்
சமையல்

அலோபதி
ஆயுர்வேதம்
சித்தா

தொடர் கதைகள்
சிறு கதைகள்
கவிதை தொகுப்பு
கார்ட்டூன்
கல்வி
மற்றும் பல...

புதிய திரைப்படங்கள் நேரடி வெளியீடு
500-க்கும் மேற்பட்ட திரைப்படங்கள்
சினிமா செய்திகள்
பாடல்கள்
நகைச்சுவை

அத்தனையும் ஒரே App-ல்...

JSK PRIME MEDIA
Mobile App

Available on amazon appstore Fire TV
GET IT ON Google Play
Download on the App Store
Available on Windows Store
SMART TV

விரைவில்... Amazon Fire TV, ஆன்ட்ராய்டு, iOS மற்றும் விண்டோஸ் தளங்கள் ஸ்மார்ட் டிவிக்களில்...

@JskPrime
JSK Prime Media
JSK Prime Media
For Details: +91 70107 25001




Advt